## II. 1968ம் ஆண்டின் பொருளாதார நிதி நிலைமைகளின் போக்குகள்

### (அ) தேசிய உற்பத்தியும் செலவும்[1]

சுருக்கமும் மதிப்பீடும்:

உண்மை உற்பத்தியும் உண்மை வருமானமும்:

1968ல் இலங்கை, பொருளாதார தொழிற்பாட்டின் கூடிய வீத வளர்ச்சியை எய்தி, தற்காலிக மதிப்பீடுகளின்படி, உண்மை உற்பத்தியில் 8.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பை அடைந்தது. தனி ஆளொன்றுக்கான நியதிகளின்படி, உண்மை உற்பத்தி 6.1 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்களவு வீதத்தில் உயர்வுற்றது.

அநேக பொருளாதாரத் துறைகளில் உயர்ந்த மட்டமான தொழிற்பாடுகள் காணப்பட்டன. விவசாயத்தின் உண்மை உற்பத்தி 6.9 சதவீதத்தால் உயர்வுற்றது. ஆயினும், கட்டடத் தொழிலிலும், தயாரிப்பிலும் வளர்ச்சி கூடிய கணிசமுடையதாயிருந்தது. இத் துறைகளினது உண்மை உற்பத்தியின் பெறுமதிகள் முறையே 27.1 சதவீதத்தாலும், 7.7 சதவீதத்தாலும் உயர்வுற்றன.

உண்மை உற்பத்தியின் கூடிய வீதவளர்ச்சிக்கு அண்மை ஆண்டுகளில் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட தூண்டுகோல்களின் விளைவே ஓரளவு காரணமாகும். அத்துடன் விவசாயத்திலேற்பட்ட இலாபங்கள் சாதகமான வானிலைகளினாலேற்பட்டன. உள்நாட்டு விவசாயத்தில், நெல் உற்பத்தி 95 இலட்சம் புசல்களால், அல்லது 17.2 சதவீதத்தாலும், ஏனைய பயிர் உற்பத்தியினதும் கடற்றொழிலினதும் உண்மைப் பெறுமதி 4.9 சதவீதத்தாலும் அதிகரித்தது. இது பெரும்பாலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்—அதிகரித்த நீர்ப்பாசன வசதிகள், விவசாயக் கொடுகடன், மானிய வளமாக்கிகள், நிலக் குத்தகைகள், விவசாயப் பிரசாரம் ஆகியனவற்றின் வெற்றியீட்டத்தைக் காட்டுகின்றது. 1967ல் நெல்லினது வெளிச் சந்தைவிலை புசலொன்று ரூபா 13.61 இலிருந்து 1968ல் ரூபா 15.86ற்கு அதிகரித்தமை, உற்பத்தியை விரிவாக்குவதான மேலுமொரு தூண்டுகோலாக அமைந்தது. ஏற்றுமதி விவசாயத்தில், தேயிலை, இரப்பர், தெங்கு ஏனைய பொருட்களின் உற்பத்திகள் 1968ல் உயர்வுற்றன. தேயிலையினதும், தெங்குப் பொருட்களினதும் உற்பத்தி அதிகரிப்புக்கு சாதகமான வானிலையும், ஓரளவிற்குக் கூடிய வளமாக்கி உட்கொள்ளலும் காரணமாகவிருக்கையில், இரப்பர் உற்பத்தி அதிகரிப்புக்கு, பெருமளவு மாற்று நடுகை செய்யப்பட்ட நிலப் பரப்புக்கள் உற்பத்தியின்கீழ் வந்தமையே காரணமாகும்.

நிலையான விலைகளின்படி சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான பெறுமதியும் 1968ல் கூர்மையாக 12.6 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தினால் அளிக்கப்பட்ட தூண்டுதலே ஓரளவு காரணமாகும். இத் திட்டத்தின்கீழ் தேயிலை, இரப்பர், தெங்கு, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், கொப்பராவைத் தவிர்த்து ஏனைய பண்டப்பொருள் ஏற்றுமதியாளர்கள், அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கும் அந்நிய செலாவணிப் பெறுமதியில் ரூபா நியதிகளின்படி, மேலதிகமாக 44 சதவீதத்திற்கு உரிமையுடையவராக இருந்தார்கள்.

தயாரிப்புத் துறையில், 1968ற்கு முந்திய ஆண்டுகளில் வளர்ச்சியை மட்டுப்படுத்திய பிரதான காரணிகளில் ஒன்று இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பற்றாக் குறையெனத் தெரிகின்றது. இக் கட்டுப்பாடுகளினால் பல நிறுவனங்கள் தமது முழு

---

1. வங்கிக்குத் தரப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட முதன்மைத் தரவுகள் இவ்வறிக்கையிற் சேர்க்கப்பட்டமையால், 1968ற்கு முந்திய ஆண்டுகளுக்கான தேசிய உற்பத்தியினதும் செலவினதும் சில மதிப்பீடுகள், முந்திய ஆண்டறிக்கைகளில் வெளிவந்த மதிப்பீடுகளுடன் மாறுபடுகின்றன.

ஆற்றலுக்கும் குறைவாகவே இயங்கின. 1968 மேயில் அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டதுடன், மூலப் பொருள் இறக்குமதிகளின் பெருமளவு தொகை கட்டற்ற பொது உத்தரவுச் சீட்டு முறையின்கீழ் கொண்டுவரப்பட்டமை யால், மூலப் பொருள் நிலைமை குறிப்பிடத்தக்களவு திருத்தமடைந்தது. இத் திட்டம் புகுத்தப்பட்டமையைத் தொடர்ந்து மூலப் பொருட்கள் கிடைக் கக்கூடியமைபற்றிய நிலையற்ற தன்மை நீக்கப்பட்டதனால், நடைமுறையி லிருக்கும் மூலப் பொருட்களின் கையிருப்புக்களை ஏறக்குறைய உடனடியாக விரைந்து உபயோகிப்பதற்கு இடமளித்தது. குறிப்பிடத்தக்களவுடைய மூலப் பொருட்களின் இறக்குமதிகளுக்காகவும் தயாரிப்பாளர்கள் வேண்டுகோள் செய்துவைத்தனர். இத் திட்டத்தினால் அளிக்கப்பட்ட தூண்டுகோலினால் கைத்தொழில் உற்பத்தியினாலூட்டப்பட்ட (தேயிலை, இரப்பர், தெங்குப் பொருட்களைத் தவிர்த்து) பெறுமதி, நிலையான விலைகளின்படி 11.4 சதவீதத் தால் உயர்வுற்றது. மின்சார இயந்திரத்திலும் (85.2 சதவீதம்), இரப்பர்ப் பொருட்களிலும் (97.9 சதவீதம்), ஆடைவகைகளின் நூற்றல் நெய்தலிலும் (19.4 சதவீதம்), இனிப்புப் பதார்த்தத்திலும் (25.1 சதவீதம்), ஏனைய உண வுத் தயாரிப்புக்களிலும் (114.7 சதவீதம்) நடைமுறை விலைகளின்படியான உற் பத்திப் பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள் காணப்பட்டன. மூலப்பொருட்கள் கூடிய அளவிற் கிடைக்கக்கூடியதாய் இருந்ததோடு, கைத் தொழிற் பொருட்களுக்கான உயர்ந்த கேள்விகளும் காணப்பட்டமையால், 1968ம் ஆண்டின் கைத்தொழில் உற்பத்தி விரிவுற்றது.

இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்களின் குறைபாட்டினால் 1966ற்கு முந்திய ஆண்டுகளில் கட்டடத்துறையில் பொருளாதாரத் தொழிற்பாடு குறைவுற்றிருந்தது. ஆயினும், 1966, 1967ம் ஆண்டுகளில் இப் பொருட்களின் அதிகரித்த கிடைப்பனவினால் தொழிற்பாடு உயர்வுற்றது. 1968ல் கட்டடப் பொருட்களின் அதிகரித்த கிடைப்பனவினால் கட்டடத் தொழிற்பாடு கூர்மையாக உயர்வுற்றது. 1968, மேயில் அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கட்டடப் பொருட்களின் இறக்குமதி கள் தளர்த்தப்பட்டதை அடுத்து, வியாபாரிகளின் வசமுள்ள கையிருப்புக்கள் குறைக்கப்பட்டதனால் உடனடியாகவும், இறக்குமதி வருகைகளினால் சில மாதங்களின் பின்பும் கட்டடம் கட்டுவோர்களுக்குக் கிடைக்கக்கூடியதா யிருந்த கட்டடப் பொருட்களின் நிரம்பல் ஓரளவிற்கு அதிகரித்தது. சீமெந் துக் கூட்டுத்தாபனத்தின் சீமெந்து உற்பத்தி 16 சதவீதத்தால் அதிகரித்த மை, இப் பண்டப் பொருளின் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்குக் காரணி யாகவிருந்தது. கட்டடச் சேவையினால் ஊட்டப்பட்ட பெறுமதி, நிலையான விலைகளின்படி 27.1 சதவீதத்தால் அதிகரித்ததெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மேற் குறிக்கப்பட்டுள்ள முக்கியத் துறைகளின் கூரிய விரிவினால் சில சேவைகளிலேற்பட்ட கேள்வியின் நிமித்தம் இவைகளின் உற்பத்தி அதி கரித்தன. ஆகவே, விவசாயத்திலும், தயாரிப்பிலும், கட்டடத்திலும் ஓரளவு பிரதான உள்ளிடுகைகளான வங்கித் தொழிலிலும், வர்த்தகத்திலும், போக்கு வரத்திலும் சேர்க்கப்பட்ட பெறுமதி கூர்மையாக அதிகரித்தது. நடைமுறை விலைகளில் பொது நிர்வாகத்திற்கு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட பெறுமதி நடைமுறை விலைகளில் 17.7 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதற்குச் சில வகுப்பைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட படி களின் அதிகரிப்பே ஓரளவு காரணமாகும். உண்மை நியதிகளில், இவ் அதி கரிப்பு 11.2 சதவீதமாக இருந்தது. பயணர் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, பொழுதுபோக்கு ஏனைய சேவைகளினது உற்பத்திப் பெறுமதிகள், இச் சேவைகளுக்கான நுகர்வுக் கேள்வி உயர்வுற்றமையால் அதிகரித்தன. சேவைத் துறையில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியின் அதி கரிப்பு, நிலையான விலைகளில் 7.7 சதவீதமாக விளங்கியது.

நடைமுறை விலைகளின்படி 1968ன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 19.2 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு உண்மை உற்பத்தியின் விரிவு ஓரளவுக்கும், விலைகளின் அதிகரிப்பு ஓரளவுக்கும் காரணமாகும். ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் சென்ற ஆண்டினதிலும்பார்க்கக் குறிப்பிடத்தக்களவு அதிகமாகவிருந்தன. 1968ல் ஏற்றுமதி விலைக் குறிகாட்டி 19.9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. வளமாக்கி, கைத்தொழில் மூலப் பொருட்கள்

போன்ற இறக்குமதி செய்யப்பட்ட உள்ளிடுகைகளினது செலவின் அதிகரிப்பினுல் அநேக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலைகளும் ஓரளவிற்கு அதிகரித்தன. இறக்குமதி செய்யப்பட்ட உள்ளிடுகைகளினது விலைகளின் உயர்விற்கு, 1967 நவெம்பரின் நாணய மதிப்பிறக்கமும், 1968 மேயில் புகுத்தப்பட்ட அ.செ.உ.சா. திட்டமுமே பிரதான காரணங்களாகும். உண்மையில் விவசாயத்தையும் கைத்தொழிலையும் மட்டுமல்லாது சேவைகளையும் பாதித்து உள்ளிடுகைகளின் விலைகளில் பொதுவான அதிகரிப்பு ஏற்பட்டது. 1968ல் சேவைகளினது விலைகளிலும் கூரிய அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. தனியார் துறையிலுள்ள சில ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட படிகளின் அதிகரிப்பு, சில தயாரிப்புப் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளின் உயர்விற்குக் காரணமாகவிருந்த செலவுக் காரணிகளில் ஒன்றுகும். தட்டுப்பாடுகளினுலும் சில விலை அதிகரிப்பபுக்கள் ஏற்பட்டன. ஆகவே, 1967ன் இறக்குமதித் தடையைத் தொடர்ந்து, உருளைக்கிழங்குகளின் தட்டுப்பாட்டினுல் இப் பண்டப் பொருளின் விலை 1968ல் அதிகரித்தது.

ஆகவே, சில விலை அதிகரிப்புக்கள் உற்பத்தியின்மீது நன்மை பயக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தின என்பது குறிப்பிடத்தக்கது. உருளைக்கிழங்கு உற்பத்தியாளரின் விலை அந்தரொன்று ரூபா 52.16லிருந்து அந்தரொன்று ரூபா 74.85க்கு அதிகரித்திருந்தமை, கமக்காரர்கள் 1966/67 பெரும்போகத்தில் உற்பத்திசெய்த 57,000 அந்தர்களிலிருந்து, 1967/68 பெரும்போகத்தில் 140,000 அந்தர்களுக்கு உற்பத்தியை அதிகரித்தமைக்கான காரணிகளில் ஒன்றுகும்.

1968ன் உண்மை உற்பத்தி வளர்ச்சியை மதிப்பிடுகையில், வர்த்தக மாற்றுவீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் கணக்கில் எடுக்கவேண்டும். ஏனெனில், இது ஏற்றுமதிகளின் இறக்குமதி ஆற்றலை மாற்றுகிறது. 1968ல் ஏற்றுமதி விலைகள் 19.9 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், இவ் இறக்குமதி விலைகள் 30.2 சதவீதத்தால் உயர்ந்ததால், வர்த்தக மாற்றுவீதம் 7.9 சதவீதத்தால் சீர்கேடடைந்தது. இதன் பொருள் யாதெனில், ஒரு குறித்த அளவுடைய ஏற்றுமதிகளைக் கொண்டுசென்ற ஆண்டிலும்பார்க்கக் குறைவான அளவுடைய இறக்குமதிகளையே இலங்கை வாங்கத்தக்கதாய் இருந்தது. பாதகமான வர்த்தக மாற்றுவிகிதத்தினுல் வருவாயில் ஏற்பட்ட நட்டத்திற்கமைய, சினைக் கொள்விலைகளின்படியான உண்மை உற்பத்தி மதிப்பீடுகளை சீராக்கம் செய்வதனுலேயே உண்மைத் தேசிய வருவாய் மதிப்பீடுகள் பெறப்படுகின்றன. அப்படியிருக்கையில், உண்மையான உற்பத்தி 8.3 சதவீதத்தால் உயர்ந்து இருக்கையில், உண்மைத் தேசிய வருவாய் 7.0 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. எனவே, வர்த்தக மாற்றுவீதத்தில் ஏற்பட்ட பாதகமான இயக்கம், 1968ன் உண்மை உற்பத்தியின் கூரிய விரிவினுல் பொருளாதாரத்திற்குச் சேரவேண்டிய நன்மைகளை ஓரளவு குறைத்தது.

1968ன் நடுப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மக்கட் தொகை 11,964,000 ஆக இருந்தது. இது சென்ற ஆண்டிலும்பார்க்க 2.2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. தனியாளுக்கான உற்பத்தி நடைமுறை விலைகளின்படி 17.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நிலையான விலைகளில் அதிகரிப்பு 6.1 சதவீதமாக இருந்தது. தனியாளுக்கான உண்மை வருவாய் 4.8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

வளத்தைப் பயன்படுத்தல்:

கிடைக்கத்தக்கதும் பயன்படுத்தப்பட்டதுமான வளங்களை பகுத்து ஆயும்போது, இறக்குமதிகளின் வளங்கள் 17.5 சதவீதத்தால் அதிகரித்ததையும், உள்ளூர் உற்பத்தியின் வளங்கள் 13.9 சதவீதத்தால் அதிகரித்ததையும் காட்டுகிறது. பயன்படுத்துதலைப் பொறுத்தவரையில், வளங்களின் கணிசமான அளவு அதிகரிப்பு மூலதன ஆக்கத்திற்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மூலதன ஆக்கம் 21.1 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று. நுகர்விற்காகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் 12.8 சதவீதத்தால் அதிகரிக்க, ஏற்றுமதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டவை 17.1 சதவீதத்தால் அதிகரித்தன. 1968ல் ஏற்பட்ட விலை அதிகரிப்பினுல், நடைமுறை விலைகளில் அளவிடப்படும்

இவ் எண்தொகைகள் 1968ல் வளங்கள் உண்மையாக ஒதுக்கப்பட்ட தன்மையை உண்மை நிலையில் பிரதிபலிக்கவில்லை. நிலையான விலைகளின்படி உண்மை வளங்களின் அதிகரிப்பு உள்ளூர் உற்பத்தியிலிருந்தே முழுதும் பெறப்பட்டது. இறக்குமதிகளின் அளவு 1.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. பயன்படுத்தலைப் பொறுத்தவரையில், மூலதன ஆக்கத்திற்கும் நுகர்ச்சிக்கும் பயன்படுத்தப்பட்ட வளங்களின் அதிகரிப்பு, உண்மை நியதியில் முறையே 5.0 சதவீதமாகவும், 5.6 சதவீதமாகவும் விளங்கின. ஏற்றுமதி செய்யப்பட்ட உண்மையான வளங்களின் அதிகரிப்பு 5.5 சதவீதமாகவே விளங்கியது.

உள்நாட்டு உற்பத்தியினுல் கிடைக்கப்பட்ட வளங்களை, மொத்த உள்நாட்டுச் செலவோடு அளவிடுகையில், மொத்தக் கேள்விக்குக் குறைந்த நிலையிலேயே வளங்கள் தொடர்ந்தும் நிலவிய போக்கினையே 1968ல் காட்டிற்று. சந்தை விலைகளின்படி, மொத்தத் தேசிய உற்பத்தியில் மொத்த உள்நாட்டுச் செலவு 1968ல் 103.6 சதவீதமாக இருந்தது. இவ் வீழ்ச்சி சென்ற ஆண்டுகள் போலவே ரூபா 3,458 இலட்சம் கொண்ட பலநாட்டு கடன்பாடுகளின் அதிகரிப்பால் நிதியீட்டம் செய்யப்பட்டது.

கேள்வியைப் பொறுத்தவகையில் 1968ன் பொருளாதார வளர்ச்சி தனியார் துறை, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கம் ஆகியவற்றின் உயர்ந்த மட்டமான நுகர்ச்சிக் கேள்வியினதும் முதலீட்டுக் கேள்வியினதும் விளைவேயாகும். தனியார் நுகர்ச்சிச் செலவு 12.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் மூலதன ஆக்கம் 21.1 சதவீத்தாலும், அரசாங்க நுகர்ச்சி 14.6 சதவீதத்தாலும் அதிகரித்தன.

### உற்பத்திப் போக்குகள் — விவசாயம்

#### தேயிலை:

1966ன் 4,900 இலட்சம் இருத்தல்களிலிருந்து, 1967ல் 4,870 இலட்சம் இருத்தல்களுக்கு வீழ்ச்சியுற்ற தேயிலை உற்பத்தி, 1968ல் 4,960 இலட்சம் இருத்தல்களுக்கு அதிகரித்தது. ஆயினும் இது, 1965ல் பெறப்பட்ட 5,030 இலட்சம் இருத்தல்கள்கொண்ட உச்ச மட்டத்திலும் குறைவாகவுள்ளது. 1968ல் ஏற்பட்ட அதிகரிப்பில் சகல பிரதேசங்களும் (உயர்ந்த, நடுத்தர, தாழ்ந்த) பங்கு கொண்டன. இதற்குச் சாதகமான வானிலை காரணமாக அமைந்தது.

தேயிலை மாற்று நடுகை மானியத் திட்டம், 1968லும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. இத் திட்டத்தின்கீழ் 1968ல் மாற்று நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு, 1967ன் 5,270 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில் 5,264 ஏக்கர்களாக விளங்கின. தேயிலையின்கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 1967ன் இறுதிக்குரிய 598,814 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில், 1968ன் இறுதியில் 597,490 ஏக்கர்களாக விளங்கிற்று.

பெருந்தோட்டங்கள் தங்கள் ஆலைகளில் நவீன முறைகளைக் கையாளுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1966ல் ஆரம்பிக்கப்பட்ட ஆலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1968ல் 120 இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன. 1967ல் இவை 84 இலட்சம் ரூபாய்களாக இருந்தன. இத் திட்டத்தின்கீழ், கடன்கள் மீதான வட்டிக்கு அரசாங்கம் மானியம் வழங்குகின்றது. கடந்த ஆண்டு மானியமாக வழங்கப்பட்ட 11 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1968ல் மானியமாகக் கொடுப்பனவு 17 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று.

முக்கிய விவசாயப் பயிர்களின் நிலப்பரப்புகளை அட்டவணை II (அ) 2ம், உற்பத்தி செய்யப்பட்ட அளவுகளை அட்டவணை II (அ) 3ம் தருகின்றன.

## அட்டவணை II (அ) 2

### பிரதான விவசாயப் பயிர்கள் — பயிர்ச்செய்கையின்கீழ் உள்ள நிலப்பரப்பு

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை | | | | | | | | | | |
| மொத்த நிலப்பரப்பு* — ஏக்கர் | 579,652 | 581,821 | 587,401 | 591,118 | 587,375 | 591,988 | 594,308 | 596,445 | 598,814 | 597,490 |
| மாற்றுநடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு-ஏக்கர் | — | 1,129 | 2,427 | 4,198 | 6,491 | 9,691 | 14,315 | 16,393 | 21,662 | 26,980 |
| இரப்பர் | | | | | | | | | | |
| மொத்த நிலப்பரப்பு* — ஏக்கர் | 668,178 | 668,948 | 670,830 | 674,274 | 675,683 | 669,179 | 566,639 | 567,744 | 572,431 | 572,909 |
| மாற்றுநடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு-ஏக்கர் | 133,148 | 151,043 | 169,730 | 187,686 | 203,291 | 216,834 | 229,336 | 240,919 | 250,995 | 262,135 |
| நெல் | | | | | | | | | | |
| அறுவடைசெய்யப்பட்ட முழுநிலப்பரப்பு-ஆ. ஏ. | 1,202.7 | 1,392.9 | 1,406.8 | 1,492.3 | 1,525.3 | 1,534.7 | 1,242.6 | 1,512.3 | 1,566.9 | 1,634.2 |
| பெரும்போகம் ... ... ஆயிரம் ஏக்கர் | 744.7 | 857.0 | 887.5 | 936.3 | 981.8 | 979.8 | 795.7 | 1,007.1 | 1,006.4 | 1,077.9 |
| சிறுபோகம் ... ... ... ஆயிரம் ஏக்கர் | 458.0 | 535.9 | 519.3 | 556.0 | 543.5 | 554.9 | 446.9 | 505.2 | 560.5 | 556.3 |

மூலங்கள் : தேயிலை, இரப்பர்க் கட்டுப்பாட்டாளரின் நிர்வாக அறிக்கைகள்;
குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

*. 1959 முதல் 1964 வரையான எண்தொகைகள் பதிவுசெய்யப்பட்ட நிலப்பரப்பைக் குறிப்பன.
1965ல் இருந்தான எண்தொகைகள் உண்மையில் அறுவடைசெய்யப்பட்ட நிலப்பரப்பைக் குறிப்பன.

இரப்பர்:

இரப்பர் உற்பத்தி தொடர்ந்து விரிவடைந்து, 1967லும்பார்க்க 120 இலட்சம் இறாத்தல்கள்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. பெரும்பாலும் இது மாற்றுநடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அதிகரித்த பகுதி உற்பத்திக்கு வந்தமையினாலாகும். 1968ல் மாற்றுநடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கடந்த ஆண்டினது 10,075 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில், 11,859 ஏக்கர்களாக விளங்கிற்று.

1968ன் இறுதியில், இரப்பரின்கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 572,909 ஏக்கர்களாக விளங்கிற்று. இதில் 262,135 ஏக்கர்கள் அல்லது 45.76 சதவீதம் மாற்றுநடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பாகும். 1968ல் ஓர் ஏக்கரின் சராசரி விளைவு 664 இறாத்தல்களாக விளங்கி, 1967ன் விளைவிலும்பார்க்க 17 இறாத்தல்களால் உயர்ந்து, உற்பத்தியிலுள்ள மாற்று நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பும், அவற்றின் விளைவுகளும் அதிகரித்தமையைப் பிரதானமாகப் பிரதிபலித்தது.

தெங்கு:

தொடர்ச்சியாக 1965லும், 1966லும், 1967லும் வீழ்ச்சியுற்ற தெங்கு உற்பத்தி, 1968ல் அதிகரிப்பைப் பதிவுசெய்தது. ஏற்றுமதிகளினதும், உள்நாட்டு நுகர்ச்சிகளினதும் தேங்காய்ச் சமநியதி 1967ன் 24,160 இலட்சத்திலிருந்து (திருத்தியமைக்கப்பட்ட எண்தொகை) 1968ல் 26,010 இலட்சத்திற்கு (அதாவது 7.7 சதவீதத்தால்) அதிகரித்தது. முந்திய மூன்று ஆண்டுகளிலும் உற்பத்தி வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கிய பாதகமான வானிலை, 1968ல் தெங்கு உற்பத்தியைப் பாதிக்காமலிருந்தது. தெங்கு வளமாக்கிகள் மானியத் திட்டத்தினால் ஊக்கமளிக்கப்பட்டு அதிகரித்துக்கொண்டுவரும் வளமாக்கிகளின் பாவிப்பும், 1968ன் உற்பத்தியிற் பலாபலன்களை விளைவித்தது. இம் மானியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வளமாக்கிகளின் அளவு, 1967ன் 51,193 தொன்களுடன் ஒப்பிடுகையில், 1968ல் 61,000 தொன்களென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மானிய விலைகளில், நாற்றுத் தென்னம்பிள்ளைகள் வழங்கும் திட்டமும், 1968ல் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நாற்றுத் தென்னம்பிள்ளைகள் 1967ன் 1,415,727ற்கு எதிராக 1968ல் 1,613,999 ஆக விளங்கின.

நெல்:

1968ல் மொத்த நெல் உற்பத்தி, 1967னது 551 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில், 646 இலட்சம் புசல்களாக விளங்கிற்று. இது 95 இலட்சம் புசல்கள் அல்லது 17.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். கடந்த ஆண்டிற்கான தொடர்பான எண்தொகைகளுடன் ஒப்பிடுகையில், பெரும்போக உற்பத்தி 24.6 சதவீதத்தாலும், சிறுபோக உற்பத்தி 5.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1968ல் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்கு, சாதகமான வானிலை, அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அதிகரிப்பு, வளமாக்கிகளினதும், உயர்ந்த விளைவுதரும் விதை நெல்லினதும் அதிகரித்த பாவிப்பு, மானியத் திட்டங்களினால் ஊக்குவிக்கப்பட்டு பயிர்ச்செய்கையில் கையாளப்பட்ட திருத்தமான முறைகள், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீவிர பிரச்சார நடவடிக்கைகள் ஆகியவையே முக்கிய காரணிகளாகும். வெளிச் சந்தையில் நெல்லிற்கான சராசரி உற்பத்தியாளர் விலை 1967ல் புசலொன்று ரூபா 13.61லிருந்து 1968ல் புசலொன்று ரூபா 15.86க்கு அதிகரித்தமையும் இதற்கு இன்னொரு காரணியாகும்.

## அட்டவணை II (அ) 3

### பிரதான விவசாயப் பயிர்களின் உற்பத்தி அளவுகள்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | முன்னுண்டிலும்பார்க்க இவ்வாண்டின்சதவீதமாற்றம் 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை (பத்து இலட்சம் இறாத்தல்கள்) ... | 435 | 455 | 467 | 485 | 482 | 503 | 490 | 487 | 496 | — 2.6 | — 0.6 | + 1.8 |
| இரப்பர் (பத்து இலட்சம் இறாத்தல்கள்) ... | 218 | 215 | 229 | 231 | 246 | 261 | 289 | 316 | 328 | +10.7 | + 9.3 | + 3.8 |
| தெங்குப் பொருட்கள்* தேங்காய்ச் சம நியதியில் (பத்து இலட்சம் காய்கள்) ... ... ... | 2,183 | 2,601 | 2,811 | 2,549 | 2,991 | 2,676 | 2,461 | 2,416 | 2,601 | — 8.0 | — 1.8 | + 7.7 |
| நெல் (பத்து இலட்சம் புசல்கள்) ... ... | 43.1 | 43.2 | 48.1 | 49.2 | 50.5 | 36.3 | 45.7 | 55.1 | 64.6 | +25.9 | +20.6 | +17.2 |

* கொப்பரா, தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய், தேங்காய் ஆகியவற்றை தெங்குப் பொருட்கள் உள்ளடக்கும்.

மூலங்கள்: தேயிலை, இரப்பர்க் கட்டுப்பாட்டாளரின் நிர்வாக அறிக்கைகள்;
குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்;
இலங்கை மத்திய வங்கி.

சிறந்த நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருந்ததால் 1967/68 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கடந்த பெரும் போகத்துடன் ஒப்பிடுகையில், 71 ஆயிரம் ஏக்கர்களால் அதிகரித்தது. ஆயினும், 1968ன் சிறுபோகத்தில் இது கடந்த ஆண்டின் தொடர்பான பருவ காலத்திலும்பார்க்க 4 ஆயிரம் ஏக்கர்களால் வீழ்ச்சியுற்றது. விதைக் கப்பட்ட மொத்த நிலப்பரப்பில், உயர் விளைச்சல் வகுப்பைச்சார்ந்த விதை களால் விதைக்கப்பட்ட நிலப்பரப்பு கடந்த பெரும்போகத்தின் 657,412 ஏக்கர்கள் அல்லது 62.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 1967/68 பெரும் போகத்தில் 897,496 ஏக்கர்கள் அல்லது 78.2 சதவீதமாக விளங்கிற்று. பாவிக்கப்பட்ட வளமாக்கிகளின் அளவு, 1968ல் 30,000 தொன்களால் அதிகரித்தது.

மொத்த விவசாயக் கொடுகடன் இதிற் பெரும்பகுதி (ஏறக்குறைய 85 சதவீதம்) நெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 1968ல் 401 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. ஒப்பியல்பில் 1967ன் அதிகரிப்பு 42 இலட்சம் ரூபாய்களாகும்.

நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, உ.வி.தி. இன் கொள்வனவுகள், 1967ற்குரிய 131 இலட்சம் புசல்களிலிருந்து 1968ல் 149 இலட்சம் புசல்களுக்கு உயர்ந்தன.

ஏனைய விவசாயமும் கால்நடையும்:

உப உணவுப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தியாளர் விலைகளின்படி 1968ல் 25.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. 1967ன் தொடர்பான பருவ காலங்களுடன் ஒப்பிடுகையில் பெரும்போக உற்பத்தியின் பெறுமதி 14.0 சதவீதத்தாலும், சிறுபோக உற்பத்தியின் பெறுமதி 36.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1967/68 பெரும்போகத்தில் உப பயிர்களின்கீழுள்ள நிலப்பரப்பு 1966/67 பெரும்போகத்துடன் ஒப்பிடு கையில், 3.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1968ல் பால் உற்பத்தி 6.9 சதவீதத்தால் அதிகரித்தது. அரசாங்கப் பண்ணைகளில், பால் உற்பத்தி 4.3 சதவீதத்தால் உயர்ந்தது. பாற் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பால் 1967ன் 170 இலட்சம் போத்தல்களிலிருந்து, 1968ல் 230 இலட்சம் போத்தல்களுக்கு உயர்ந்தது. முட்டை உற்பத்தியும் 1968ல் 2.7 சதவீதத் தால் அதிகரித்தது.

மீன்பிடித்தல்:

உற்பத்தியாளர் விலைகளின்படி மீன் உற்பத்தி, 29.5 சதவீத அதிகரிப் பைப் பதிவுசெய்தது. தொழிலில் ஈடுபட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை களில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு ஓரளவு காரணமாகும். பயன்படுத்தப் பட்ட 11 தொன் வள்ளங்களின் எண்ணிக்கை, 1967ன் இறுதியில் 25 லிருந்து 1968 இறுதியில் 39க்கு அதிகரித்தது. கடற்றொழில் கூட்டுத்தாப னத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஈரமீன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடு கையில், 20 இலட்சம் இறாத்தல்களால் அதிகரித்தது.

தயாரிப்பு:

1968ம் ஆண்டு, கைத்தொழில் உற்பத்தி கணிசமான அதிகரிப் பைக் காட்டியுள்ளது. தயாரிப்புகளில் கூட்டப்பட்ட பெறுமதி (தேயிலை, இரப்பர், தெங்கு தவிர்த்து), நடைமுறை விலைகளில் 18.2 சதவீதத்தாலும், நிலையான விலைகளில் 11.4 சதவீதத்தாலும் அதிகரித்தது. தனியார்துறை யில் ,மின்சார இயந்திரங்கள், இரப்பர் பொருட்கள், உடைகள், உருவாக்கப் பட்ட உலோகப் பொருட்கள், இனிப்புப் பண்டங்கள் ஆகியவற்றிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில், சீமெந்து, இரும்புப் பொருட்கள், பீங் கான், டயர்கள், ரியூப்புக்கள், விலங்குகளுக்கும் கோழிகளுக்குமான உணவு ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் காணப்பட்டன.

அரசாங்கத் துறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி அதிகரிப்புக்கு, கிடைக்கத்தக்க உற்பத்தி ஆற்றலைக் கூடிய விகிதத்திற் பயன்படுத்தியது ஓரளவிற்கும், மூலதன விரிவு ஓரளவிற்கும் காரணமாகவிருந்தன. கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் நிலையான மூலதன ஆக்கம் 1967ன் 391 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1968ல் 1,150 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

எனினும், தனியார் துறையில் இருந்த உற்பத்தியாற்றல் உயர்ந்த வீதத்தில் பயன்படுத்தப்பட்டமையால் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1968 இற்குமுன் பல தாபனங்கள், இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட மூலப்பொருட் தட்டுப்பாடு குறைப்புக்களினால் உற்பத்தி ஆற்றலுக்குக் குறைவாகவே செயலாற்றத்தில் இருந்தன. 1968 மேயில் அ.செ.உ.சா. திட்டம், மூலப்பொருட்கள் இறக்குமதிகளைத் தளர்த்தியுள்ளது. இந்த நடவடிக்கை உற்பத்தியாளர்களை முதலாவதாக மூலப்பொருட்களின் இறக்குமதிக்குப் பெரிய வேண்டுகோள்கள் அமைப்பதற்கும், இரண்டாவதாக கையிருப்பிலுள்ள மூலப்பொருட்களைத் தொழிற்படுத்தவும் தூண்டிற்று. ஏற்றுமதியிலும் உள்நாட்டு விவசாயத்திலும் அதிகரித்துள்ள வருமானங்கள் 1968ல் கைத்தொழில் விரிவதற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியன.

### கட்டட ஆக்கம்:

கட்டட ஆக்க முயற்சி 1968ல் உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்துள்ளது. கட்டட ஆக்க முயற்சி 1966 வரையும் பல ஆண்டுகளாகக் கட்டட ஆக்கப் பொருட்களின், பிரதானமாக இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களின் குறைவினால் பாதிக்கப்பட்டது. எனினும், 1967ல் கட்டட ஆக்கத்திற்குச் சேர்க்கப்பட்ட பெறுமானம் இறக்குமதி செய்யப்பட்டதும், உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுமான இருபுறத்துக் கட்டட ஆக்கப் பொருட்களின் கிடைப்பனவின் அதிகரிப்புக் காரணமாக 19.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 1968ல் கட்டட ஆக்கப் பொருட்களின் கிடைப்பனவு, முதலாவதாக அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் ஏற்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் தளர்ச்சியினாலும், இரண்டாவதாக சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த சீமெந்து உற்பத்தியினாலும் மிக உயர்வுற்றது. கட்டட ஆக்கப் பொருட்களின் இறக்குமதித் தொகைக் குறிகாட்டி 1967ன் 65இலிருந்து 1968ல் 74ற்கு அதிகரித்தது. கட்டட ஆக்கப் பொருட்களின் இறக்குமதிகள் 1968ன் மூன்றும் நான்காம் காலாண்டுப் பகுதிகளில் மாத்திரம் அதிகரித்திருந்தபோதிலும், அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டபோது பொருட்கள் நிரம்பலுக்கு வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தமையினால், நிரம்பலை எதிர்பார்த்து வியாபாரிகள் தமது கையிருப்புக்களைக் குறைத்ததன் காரணமாக 1968 மே/யூனில் கட்டட ஆக்கப் பொருட்கள் கிடைக்கக் கூடியமை அதிகரித்தது. சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின், பிரதானமாக முந்திய ஆண்டில் இயக்கத்திற்கு வந்த அதன் காலி எந்திரத்தின் சீமெந்து உற்பத்தி அதிகரித்தது.

கட்டட ஆக்கத்திற்குச் சேர்க்கப்பட்ட பெறுமானம் நடைமுறை விலைகளில் 33.9 சதவீதமாகவும், நிலையான விலைகளில் 27.1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

### சேவைகள்:

சேவைத் துறைகளிலுள்ள உற்பத்தியும் 1968ல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. விவசாயம், தயாரிப்பு கட்டட ஆக்கம் ஆகியவற்றில் உள்ள அதிகரித்த முயற்சியுடன், பிரதான. துறைகளுக்கு உள்ளீடுகளை வழங்கும் சில சேவைகளின், பிரதானமாக வியாபாரம், போக்குவரத்து, வங்கித்தொழில் ஆகியவற்றின் விரிவு எதிர்பார்க்கப்பட்டதொரு விடயமாகும். உதாரணமாக, புகையிரதத்தின் பொருட்களின் தொன் மைல்கள் 4.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனத்தினால் கையாளப்பட்ட கப்பற்படுத்தற் சரக்கு 5.0 சதவீதத்தால் அதிகரித்

தது. ஏனைய சேவைகள் முதற்தர இரண்டாந்தரக் கைத்தொழில்களின் உற்பத்தி வளர்ச்சியிலும்பார்க்கப் புறம்பாக அதிகரித்தன. பயணர்ப் போக்குவரத்திற்கான நுகர்ச்சிக் கேள்வி அதிகரிப்பு, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயணர்மைலில் 10.3 சதவீதத்தினுலான அதிகரிப்பையும், புகையிரதத்தில் 7.7 சதவீதத்தினுலான அதிகரிப்பையும் ஏற்படுத்தியது. அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட சுகாதார, கல்வி, பொது நிர்வாகச் சேவைகளின் கேள்வி அதிகரிப்பினுல் இச் சேவைகளிற் சேர்க்கப்பட்ட பெறுமானமும் 1968ல் உயர்வைப் பதிவுசெய்தது. சேவைத் துறையில் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமானம் நடைமுறை விலைகளில் 10.6 சதவீதத்தாலும், நிலையான விலைகளில் 7.7 சதவீதத்தாலும் அதிகரித்தன.

## மொத்தத் தேசிய உற்பத்தி — சினைக் கொள்விலைகளின்படி

### உற்பத்திப் பெறுமானம் — நடைமுறைவிலைகளின்படி

அட்டவணை II (அ) 4 நடைமுறைச் சினைக் கொள்விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்திகளின் மதிப்பீடுகளைக் காட்டுகிறது. 1968ல் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி 19.3 சதவீத கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. இது பிரதானமாக விவசாயத் தயாரிப்பு, கட்டட விரிவுகளினுலாகும்.

1968ல் வீழ்ச்சியுற்ற ஏற்றுமதி விவசாயத்தின் உற்பத்திப் பெறுமானம் 1968ல் சீர்திருந்தியுள்ளது. மூன்று பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்திருக்க, அவற்றின் விலைகளும் ஓரளவு கூர்மையாக அதிகரித்தன. உற்பத்தியின் அதிகரிப்புகளாவன தேயிலை 1.8 சதவீதம், இரப்பர் 3.8 சதவீதம், தெங்கு 7.7 சதவீதமாகும். கொழும்புச் சந்தையின் தேறிய சராசரி விலை 16.7 சதவீதத்தாலும், ஆர்.எஸ்.எஸ்.1 ஆம் இரக இரப்பரின் விலை 11.4 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன. தெங்கின் நாடு முழுவதிற்குமான சராசரி உற்பத்தியாளர் விலை 1967ன் தேங்காயொன்றிற்கு 18 சதங்களிலிருந்து 1968ல் 23 சதங்களுக்கு அதிகரித்தது.

சிறுவகை ஏற்றுமதிப் பொருட்களுக்குச் சேர்க்கப்பட்ட பெறுமானமும், விலை உயர்ச்சியினுலும் பலவிடயங்களில் உற்பத்தியளவின் அதிகரிப்புகளினுலும் உயர்வுற்றது. சேர்க்கப்பட்ட பெறுமானத்தில் உயர்ந்த அதிகரிப்பு உள்நாட்டு விவசாயத்திற் காணப்பட்டது. சாதகமான காலநிலைகளினுலும், அரசாங்கத்தினுல் அளிக்கப்பட்ட உற்சாகத்தினுலும் நெல் உற்பத்தி 17.2 சதவீதத்தினுல் அதிகரித்தது. வெளிச் சந்தையிலும் நெல்லின் சராசரி உற்பத்தியாளர் விலை புசலொன்றிற்கு ரூபா 13.61 இலிருந்து ரூபா 15.86 இற்கு, அதாவது 16.5 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு விவசாயத்திற்குச் சேகரிக்கப்பட்ட பெறுமானம் 1968ல் 28.8 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த விவசாயத்திற்குச் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமானம் 27.0 சதவீதத்தால் அதிகரித்திருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் மூலப்பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டமையால், தயாரிக்கப்பட்ட பொருட்களின் உள்நாட்டு உற்பத்திப் பெறுமானம் (தேயிலை, இரப்பர், தெங்கு தவிர்ந்த) 1968ல் கூர்மையாக அதிகரித்தது. உற்பத்தி அதிகரிப்புகள், மின்சார எந்திரம், இரப்பர் பொருட்கள், உடைகள், உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், சீமெந்தும் சீமெந்து உற்பத்திகளும், இனிப்புப் பதார்த்தம், வன்பொருள், பீங்கான் பொருட்கள், ரயர்களும், ரியூப்புக்களும், விலங்கு, கோழிப்பண்ணை உணவும் என்பனவற்றிற் காணப்பட்டன. தயாரிப்பு உற்பத்திகளின் அதிகரிப்பு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும், தனியார் துறைக் கைத்தொழில்களிலும் ஏற்பட்டதாகும். பல தயாரிக்கப்பட்ட பொருட்களினது விலைகளும் 1967ல் நாணய மதிப்பிறக்கத்தாலும், 1968இல் மே, அ.செ.உ.சா. திட்டத்தினுலும் இறக்குமதி உள்ளீடுகளின் அதிகரித்த விலையினுலும், சில வகுப்பு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாணய மதிப்பிறக்கப் படிகளினுலேற்பட்ட கூலிச் செலவுகளினுலும் அதிகரித்தன,

அட்டவணை *II* (அ) 4

நடைமுறை சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முந்திய ஆண்டைவிட சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1966 | 1967 | 1968 |
| 1. விவசாயம், வனவியல், கால்நடை, மீன் பிடித்தல் ... ... ... ... | 2,302.4 | 2,389.7 | 2,456.1 | 2,392.3 | 2.600.2 | 2,663.5 | 2,522.5 | 2,608.1 | 2,879.3 | 3,655.9 | + 3.4 | +10.4 | +27.0 |
| 2. சுரங்கத்தொழிலும் பார்க்குழித் தொழிலும் | 31.3 | 32.2 | 31.7 | 33.4 | 30.0 | 33.1 | 35.1 | 38.4 | 39.9 | 46.8 | + 9.4 | + 3.9 | +17.3 |
| 3. தயாரிப்புத் தொழில் ... ... | 682.1 | 711.7 | 709.5 | 748.9 | 783.6 | 819.4 | 918.5 | 866.2 | 911.0 | 1,160.3 | — 5.7 | + 5.2 | +27.4 |
| 4. கட்டட ஆக்கம் ... ... ... | 282.9 | 283.1 | 279.1 | 297.0 | 285.4 | 306.3 | 286.9 | 317.2 | 380.2 | 508.9 | +10.6 | +19.9 | +33.9 |
| 5. மின்சார, வாயு, நீர், சுகாதார சேவைகள் | 9.5 | 9.8 | 10.4 | 11.1 | 11.4 | 12.9 | 13.5 | 14.3 | 15.1 | 16.4 | + 5.9 | + 5.6 | + 8.6 |
| 6. போக்குவரத்தும், களஞ்சியமும், செய்தி அறிவிப்பும் ... ... ... | 540.9 | 587.3 | 578.9 | 633.6 | 636.6 | 706.3 | 775.6 | 829.2 | 841.5 | 910.7 | + 6.9 | + 1.5 | + 8.2 |
| 7. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் ... ... ... | 800.8 | 936.5 | 872.8 | 954.4 | 971.2 | 1,146.6 | 1,191.2 | 1,237.8 | 1,272.6 | 1,363.6 | + 3.9 | + 2.8 | + 7.2 |
| 8. வங்கித் தொழிலும், காப்புறுதியும், மெய்ச் சொத்துக்களும் ... ... ... | 50.9 | 51.5 | 58.4 | 64.5 | 68.5 | 75.9 | 93.2 | 85.8 | 107.4 | 138.6 | — 7.9 | +25.2 | +29.1 |
| 9. குடியிருப்புக்களின் உடைமைகள் ... | 200.6 | 213.5 | 233.1 | 248.6 | 260.3 | 275.3 | 294.0 | 314.0 | 335.5 | 366.3 | + 6.8 | + 6.8 | + 9.2 |
| 10. பொது நிர்வாகமும், பாதுகாப்பும் ... | 301.0 | 314.4 | 323.5 | 343.7 | 365.1 | 363.3 | 371.9 | 396.5 | 402.9 | 474.3 | + 6.6 | + 1.6 | +17.7 |
| 11. சேவைகள் ... ... ... | 727.6 | 801.3 | 799.7 | 821.5 | 836.9 | 923.6 | 996.5 | 1,028.3 | 1,091.8 | 1,227.4 | + 3.2 | + 6.2 | +12.4 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தொகை | 5,930.0 | 6,331.0 | 6,353.2 | 6,549.0 | 6,849.2 | 7,326.2 | 7,498.9 | 7,735.8 | 8,277.3 | 9,869.2 | + 3.2 | + 7.0 | +19.2 |
| 13. தேறிய சினை வருமானம் ... ... | —36.7 | —44.2 | —39.9 | —46.5 | —52.5 | —35.7 | —15.4 | —36.8 | —53.5 | —60.5 | | | |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... ... | 5,893.3 | 6,286.8 | 6,313.3 | 6,502.5 | 6,796.7 | 7,290.5 | 7,483.5 | 7,699.0 | 8,223.8 | 9,808.7 | + 2.9 | + 6.8 | +19.3 |

விளக்கக் குறிப்புகளுக்கு 59ம் பக்கத்தைப் பார்க்கவும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

கட்டட முயற்சிகளின் விரிவு 1968ல் மொத்தத் தேசிய உற்பத்திக்கு ஒரு முக்கிய உதவியாயமைந்தது. உள்நாட்டினதும், இறக்குமதி செய்யப்பட்டதுமான கட்டட ஆக்கப்பொருட்களின் அதிகரித்த கிடைப்பனவே கட்டட ஆக்க விரிவிற்கு முக்கிய காரணமாகும்.

1968ல் சேவைத் துறையில் அதாவது போக்குவரத்து, வியாபாரம், வங்கித் தொழிலும் காப்புறுதியும், வதிவிடங்கள், பொது நிர்வாகமும் ஏனைய சேவைகளுக்கும் சேர்க்கப்பட்ட பெறுமானம் 10.6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததென மதிப்பிடப்பட்டுள்ளது. இச் சேவைகளின் பெறும்பகுதி கமத்தொழில், கைத்தொழில், கட்டட ஆக்கத் தொழில்களில் உபயோகிக்கப்பட்ட உள்ளிடுகைகளான பொருட்களை ஏற்றியிறக்கல், வியாபாரம் வங்கித் தொழில், ஆகியவற்றினை உள்ளடக்கும். இச் சேவைகளின் விரிவு, பிரதானமாக விவசாயம், தயாரிப்பு, கட்டடவாக்கம் என்பனவற்றுல் எழுந்ததாகும். நுகர்வுக் கேள்வி அதிகரிப்பினுல், ஏனைய சேவைகளிலும் விரிவு ஏற்பட்டது. இவை பிரதானமாக பயணர் போக்குவரத்து, பொது நிர்வாகம், கல்வி, சுகாதாரம் என்பனவற்றைக் கொண்டுள்ளன. அரசாங்கத்தினுல் வழங்கப்படும் சேவைகளிலும், பொது நிர்வாகத்திலும் சேர்க்கப்பட்ட பெறுமானத்தின் அதிகரிப்பிற்கு, 1968ல் சில ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகரித்தப் படிகளின் விளைவு ஓரளவிற்குக் காரணமாக அமையும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி 1968ல் ரூபா 82,773 இலட்சத்திலிருந்து ரூபா 98,692ற்கு, 19.2 சதவீத அதிகரிப்பை எய்தியது. 1968ல் இலங்கையிலிருந்து வெளியேறும் சினைவருமானங்கள், 1967ன் ரூபாய் 535 இலட்சம் தேறிய வெளியேறுகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 605 இலட்சமாகவிருந்தது. மொத்தத் தேசிய உற்பத்தியைச் சினைவருமானங்களின் தேறிய வெளியேற்றத்திற்கமையச் சீராக்கஞ் செய்து பெறப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 1968ல் 19.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

உண்மை உற்பத்தியும் உண்மை வருமானமும்:

அட்டவணைகள் II (அ) 5இலும், II (அ) 6இலும் உண்மை உற்பத்தியினதும், உண்மை வருமானத்தினதும் மதிப்பீடுகள் காட்டப்பட்டுள்ளன. நிலையான (1959) சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி 1968ல் 8.3 சதவீதத்தாற் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. இது 1967ன் வளர்ச்சி வீதத்திலும் ஏறக்குறைய இருமடங்கு உயர்ந்ததாகும்.

மொத்த உற்பத்திக்கு 36.7 சதவீதத்தை உதவிய விவசாய உற்பத்தி 6.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது முன்பு கூறப்பட்ட தேயிலை, இரப்பர், தெங்கு, நெல் உப உணவுப் பயிர்கள், பால், முட்டை என்பவற்றின் உற்பத்தி அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

தயாரிப்பின் உண்மைப் பெறுமானம் 7.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மின்சார எந்திரங்கள், இரப்பர்ப் பொருட்கள், உடைகள், சீமெந்து, விலங்கு, கோழிப்பண்ணை உணவு என்பவற்றின் உற்பத்தியிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. கட்டட ஆக்கத்தின் உண்மைப் பெறுமானம் 27.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கட்டட முயற்சி அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிற் குறிப்பிடத்தக்களவு உயர்ந்து இருந்தது. சகல கூட்டுத்தாபனங்களினது கட்டட் ஆக்க முதலீட்டம் 1967ம் ஆண்டின் ரூபா 982 இலட்சத்திலிருந்து, 1968ல் ரூபா 1,634 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது.

1968ல் விவசாயம் தயாரிப்பு, கட்டட ஆக்க உற்பத்திகளின் வளர்ச்சியோடுசேர்ந்து சேவைத் துறையிலுள்ள உற்பத்தியின் உண்மைப் பெறுமானம் கூர்மையாக அதிகரித்தது. இது, வியாபாரமும், போக்குவரத்துச் சேவைகளினுற் கையாளப்பட்ட பொருட்கள், நிதி நிலையங்களால் வழங்கப்பட்ட வங்கித் தொழிலும் நிதிச் சேவைகளும், அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட சுகாதார, கல்வி, பொது நிர்வாகச் சேவைகள் என்பவற்றின் அதிகரிப்புகளைப் பிரதானமாக பிரதிபலித்தது.

அட்டவணை *II* (அ) 5

நிலையான 1959ம் ஆண்டுச் சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1966 | 1967 | 1968 |
| 1. விவசாயமும், வனவியலும், வேட்டையாடுதலும் ... ... | 2,302.4 | 2,435.5 | 2,613.5 | 2,694.5 | 2,846.0 | 2,945.9 | 2,772.8 | 2,836.9 | 3,039.9 | 3,248.4 | + 2.3 | + 7.2 | + 6.9 |
| 2. சுரங்கத் தொழிலும், பார்க்குழித் தொழிலும் ... ... ... | 31.3 | 32.4 | 31.8 | 33.2 | 29.5 | 32.1 | 34.0 | 37.1 | 37.0 | 37.3 | + 9.1 | —0.3 | + 0.8 |
| 3. தயாரிப்புகள் ... ... ... | 682.1 | 728.0 | 745.9 | 797.6 | 853.0 | 901.3 | 936.9 | 1,008.1 | 1,052.0 | 1,133.0 | + 7.6 | + 4.4 | + 7.7 |
| 4. கட்டட ஆக்கத் தொழில் ... ... | 282.9 | 280.9 | 268.6 | 281.5 | 271.8 | 283.3 | 266.2 | 293.2 | 350.8 | 446.0 | +10.1 | +19.6 | +27.1 |
| 5. மின்சாரம், வாயு, நீர், சுகாதார சேவைகள் ... ... ... | 9.5 | 9.8 | 10.4 | 11.1 | 11.4 | 12.9 | 13.5 | 14.3 | 14.7 | 15.0 | + 5.9 | + 2.8 | + 2.0 |
| 6. போக்குவரத்தும், களஞ்சியப்படுத்துதலும், செய்தி அறிவிப்பும் ... ... | 540.9 | 584.8 | 565.7 | 608.1 | 591.8 | 640.7 | 740.3 | 791.8 | 781.6 | 823.9 | + 7.0 | — 1.3 | + 5.4 |
| 7. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் ... ... ... | 800.8 | 928.8 | 839.4 | 891.9 | 875.1 | 1,003.1 | 1,105.2 | 1,144.1 | 1,174.3 | 1,253.3 | + 3.5 | + 2.6 | + 6.7 |
| 8. வங்கித் தொழிலும், காப்புறுதியும், அசைவற்ற ஆதனமும் ... ... | 50.9 | 51.8 | 58.5 | 64.2 | 67.4 | 73.6 | 90.4 | 83.0 | 99.6 | 110.4 | — 8.2 | +20.0 | +10.8 |
| 9. குடியிருப்புக்களின் உடைமைகள் ... | 200.6 | 211.8 | 224.2 | 235.8 | 227.2 | 254.8 | 272.8 | 272.8 | 265.4 | 274.7 | ... | — 2.7 | + 3.5 |
| 10. பொதுப் பரிபாலனமும், பாதுகாப்பும் | 301.0 | 314.4 | 323.5 | 343.7 | 365.1 | 363.3 | 371.9 | 396.5 | 388.9 | 432.4 | + 6.6 | — 1.9 | +11.2 |
| 11. சேவைகள் ... ... ... | 727.6 | 754.2 | 783.3 | 798.1 | 812.3 | 886.0 | 960.9 | 992.3 | 1,021.4 | 1,125.8 | + 3.3 | + 2.9 | +10.2 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 5,930.0 | 6,332.4 | 6,464.8 | 6,759.7 | 6,950.6 | 7,397.0 | 7,564.9 | 7,870.1 | 8,225.6 | 8,900.2 | + 4.0 | + 4.5 | + 8.2 |
| 13. வெளிநாட்டிலிருந்தான தேறிய சினை வருமானம் ... ... ... | —36.7 | —43.9 | —40.1 | —49.8 | —50.9 | —33.7 | —14.3 | —36.1 | —44.5 | —38.7 | | | |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 5,893.3 | 6,288.5 | 6,424.7 | 6,709.9 | 6,899.7 | 7,363.3 | 7,550.6 | 7,834.0 | 8,181.1 | 8,861.5 | + 3.8 | + 4.4 | + 8.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 6

### உண்மைத் தேசிய வருமானம்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முந்திய ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1967 | 1968 |
| 1. நிலையான 1959ம் ஆண்டுச் சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி ... | 5,893.3 | 6,288.5 | 6,424.7 | 6,709.9 | 6,899.7 | 7,363.3 | 7,550.6 | 7,834.0 | 8,181.1 | 8,861.5 | + 4.4 | +8.3 |
| 2. ஏற்றுமதிகள்மீது வர்த்தகமாற்று விகிதத்தில் எழுந்த பலாபலன் ... ... ... | | | | | | | | | | | | |
| (i) தேயிலை ... ... ... ... | | – 31.9 | – 36.9 | + 1.4 | –133.7 | –156.0 | –211.8 | –317.7 | –419.2 | –513.2 | | |
| (ii) இரப்பர் ... ... ... ... | | +37.3 | – 24.5 | – 13.3 | – 55.7 | – 93.7 | –103.5 | –145.3 | –190.1 | –261.8 | | |
| (iii) மூன்று பிரதான தெங்கு உற்பத்திப்பொருட்கள் | | – 26.0 | – 90.3 | – 79.6 | – 63.1 | – 84.4 | – 12.0 | – 44.6 | – 54.7 | – 26.8 | | |
| (iv) ஏனைய உற்பத்திப் பொருட்கள் ... ... | | + 10.0 | + 1.1 | + 9.6 | + 10.7 | + 18.3 | + 18.4 | + 2.3 | – 3.1 | – 19.6 | | |
| (v) சகல உற்பத்திப் பொருட்களும் ... ... | | – 10.6 | –150.6 | – 81.9 | –241.8 | –315.8 | –308.9 | –505.3 | –667.1 | –821.3 | | |
| 3. நிலையான 1959ம் ஆண்டு சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய வருவாய் ... ... | 5,893.3 | 6,277.9 | 6,274.1 | 6,628.0 | 6,657.9 | 7,047.5 | 7,241.7 | 7,328.7 | 7,514.0 | 8,040.2 | + 2.5 | + 7.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தேசிய வருமான மட்டத்திற்குத் தொடர்பாக ஏற்றுமதி இறக்குமதி களின் பெறுமானத்தின் முக்கியத்துவம் காரணமாக, 1968ன் உண்மை உற்பத்தி விரிவு ஏற்றுமதி இறக்குமதி விலைகளின் இயக்கங்களிற்கு எதிராக மதிப்பிடப்படல் வேண்டும். இலங்கையின் வர்த்தக மாற்றுவீதம் இறக்குமதி விலைகளில் அதிகரிப்புக் காரணமாக 1968ல் தொடர்ந்தும் வீழ்ச்சியுற்றது. வர்த்தக மாற்றுவீதம் இவ்வாண்டில் 7.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று, இறக்குமதி நியதிகளில், நாட்டின் ஏற்றுமதிக் கொள்வனவுச் சக்தியைக் குறைத்தது. 1959ன் அடிப்படையின்படி வர்த்தக மாற்றுவீதத்தின் பாதக மான இயக்கத்தினுலேற்பட்ட வருமான வீழ்ச்சி, 1967ல் ரூபாய் 6,671 இலட்ச இழப்புடன் ஒப்பிடுகையில், 1968ல் ரூபா 8,213 இலட்சமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. பாதகமான வர்த்தக மாற்றுவீதத்தினுல் ஏற்பட்ட வருமான இழப்பிற்காக உண்மை உற்பத்திக் கணக்குகளைச் சீராக்கம்செய்து பெறப்பட்ட உண்மைத் தேசிய வருமானம் 1967ல் ரூபா 75140 இலட் சத்துடன் ஒப்பிடுகையில் 1968ல் ரூபா 80,402 இலட்சமாகவிருந்தது.

தனியாளுக்கான உற்பத்தியும் வருமானமும்

பதிவாளர் தலைமை அதிபதியாற் செய்யப்பட்ட தற்காலிக மதிப்பீடு களின்படி, இலங்கையின் மத்திய—ஆண்டுச் சனத்தொகை 1967ன் 11,701,000லிருந்து 11,964,000ற்கு அதிகரித்தது. இந்த 2.2 சதவீத அதிகரிப்பு 1966ன் 2.4 சதவீத அதிகரிப்புடனும், 1967ன் 2.3 சதவீத அதிகரிப்புடனும் ஒப்பிடுகையில், சனத்தொகை வளர்ச்சியில் ஒரு வீழ்ச்சிப் போக்கைக் காட்டியது. இதற்கு அண்மை ஆண்டுகளில் பிறப்பு வீதங் களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். இது, கல்விச் சராசரித் தரத்தின் அதிகரிப்பு, வேலை தேடும், அல்லது வேலையிலுள்ள பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பினுல் ஏற்பட்ட விவாக ஒத்திப் போடுதலும், குடும்பக் கட்டுப்பாட்டு மருந்தகங்களினூற் பரப்பப்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டு முறை கள் ஆகியவற்றின் விளைவேயாகும்.

1968ல் தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி நடைமுறை விலைகளில் 17.1 சதவீதத்தினுலும், நிலையான விலைகளில் 6.1 சதவீதத் தாலும் உயர்ந்தது. தனியாளுக்கான உண்மை வருமானம் 4.8 சதவீதத்தினுல் அதிகரித்தது.

**மொத்தத் தேசியச் செலவு**

நுகர்வோர் கேள்வி :

மொத்தத் தேசியச் செலவுக் கணக்கீடுகள் அட்டவணைகள் II(அ) 7இலும், II (அ) 8இலும் காட்டப்பட்டுள்ளன. தனியார் நுகர்ச்சிச் செலவின் விவ ரங்கள் அட்டவணைகள் II(அ) 9இலும், II (அ) 10இலும் தரப்பட்டுள்ளன. தனியார் நுகர்வுச் செலவு முந்திய ஆண்டிலும் கிட்டத்தட்ட இரு மடங்கு கூடிய வீதத்தில் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, 1967ல் 7.0 சதவீதமும், 1968ல் 12.5 சதவீதமுமாகும். மிக முக்கியமான 10.1 சதவீத அதிகரிப்பு உணவையொட்டியதாகும். ஏனைய முக்கிய அதிகரிப்புகள், உடை வகை களில் 23.3 சதவீதமும், வீட்டு இயக்கங்களில் 26.4 சதவீதமும் சொந்தக் கவனிப்பில் 26.5 சதவீதமுமாகும்.

நுகர்வுச் செலவு அமைப்புமுறை சென்ற இரு ஆண்டுகளில் மாற்றமுரு திருந்தது. 1968ல் உணவு, குடிவகைகள், புகையிலை மேலுள்ள செலவு, மொத்த நுகர்வுச் செலவின் 58.1 சதவீதத்தைக் கொண்டது. இதில் 49.8 சதவீதம் உணவில் மட்டுமேயாகும். ஏனையவற்றுள் உடைவகைகள் 7.3

## அட்டவணை II (அ) 7

### நடைமுறை விலைகளில் மொத்தத் தேசியச் செலவு

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முந்திய ஆண்டினைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1967 | 1968 |
| 1. தனியார் நுகர்ச்சி ... | 4,635.7 | 5,019.9 | 4,911.7 | 5,009.6 | 5,339.1 | 5,754.8 | 5,880.9 | 6,273.7 | 6,711.6 | 7,550.4 | + 7.0 | + 12.5 |
| i. பொருட்கள் சினைச்சார் பற்ற சேவைகளினது இறக்குமதிகள் ... | 1,989.7 | 2,058.9 | 1,845.3 | 1,868.0 | 1,675.6 | 1,861.4 | 1,719.2 | 18,76.5 | 1,518.0 | 5,137.1 | — 19.1 | + 1.3 |
| ii. உள்ளூர் உற்பத்திகளும் சேவைகளும் ... ... | 2,646.0 | 2,961.0 | 3,066.4 | 3,141.6 | 3,663.5 | 3,893.4 | 4.161.7 | 4.397.2 | 51,93.6 | 6,013.3 | + 18.1 | + 15.8 |
| 2. அரசாங்க நுகர்ச்சி ... | 881.3 | 911.0 | 926.2 | 979.4 | 1,010.1 | 1,090.1 | 1,156.7 | 1,158.3 | 1,228.3 | 1,407.8 | + 6.0 | 14.6 |
| i. பொருட்கள், சேவைகளின் நடைமுறைச் செலவு—மத்திய அரசாங்கம் ... | 771.4 | 803.2 | 831.3 | 879.7 | 905.8 | 980.0 | 1,043.7 | 1,034.3 | 1,099.3 | 1,268.3 | + 6.3 | + 15.4 |
| ii. பொருட்கள் சேவைகளின் நடைமுறைச் செலவு-உள்ளூர் ஆட்சிகள் ... ... | 90.0 | 86.9 | 73.9 | 78.2 | 82.8 | 87.6 | 90.0 | 100.0 | 105.0 | 115.0 | + 5.0 | + 9.5 |
| iii. அரசாங்கக்கட்டடங்களின் குறித்த வாடகைகள் ... | 19.9 | 20.9 | 21.0 | 21.5 | 22.0 | 22.5 | 23.0 | 24.0 | 24.0 | 24.5 | ... | + 2.1 |
| 3. மொத்தஉள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... ... | 1,118.1 | 1,022.1 | 1,037.4 | 1,100.8 | 1,095.3 | 1,119.6 | 1,043.0 | 1,187.2 | 1,366.3 | 1,567.7 | + 15.1 | + 14.7 |
| i. அரசாங்கம் ... ... | 256.2 | 237.7 | 249.4 | 259.9 | 256.7 | 238.8 | 249.9 | 265.0 | 327.2 | 347.2 | + 23.5 | + 6.1 |
| ii. அரசாங்க முயற்சிகள் ... | 79.6 | 79.4 | 91.7 | 103.7 | 127.3 | 101.8 | 129.8 | 123.8 | 114.8 | 119.2 | — 7.3 | + 3.8 |
| iii. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 90.4 | 88.4 | 77.3 | 88.7 | 94.0 | 151.1 | 149.6 | 220.5 | 187.3 | 277.7 | — 15.1 | + 48.3 |
| iv. தனியார் துறை ... | 691.9 | 616.6 | 619.0 | 648.5 | 617.3 | 627.9 | 513.7 | 577.9 | 737.0 | 823.6 | + 27.5 | + 11.7 |
| 4. கையிருப்புக்களின் மாற்றங்கள் ... ... | — 5.6 | — 44.4 | + 64.1 | — 20.4 | + 65.0 | — 6.5 | — 29.8 | + 7.9 | + 10.7 | + 100.1 | | |
| i. அரசாங்கமும் அரசாங்க முயற்சிகளும் ... ... | — 21.9 | — 14.4 | + 53.5 | + 39.8 | + 4.7 | — 4.7 | + 3.8 | — 35.5 | + 3.8 | + 64.5 | | |
| ii. அரசாங்கக்கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் | + 16.3 | — 30.0 | + 10.6 | — 60.2 | + 60.3 | — 1.8 | — 53.6 | + 43.4 | + 6.9 | + 35.6 | | |
| 5. மொத்த உள்நாட்டுச்செலவு | 6,629.5 | 6,908.6 | 6,939.4 | 7,069.4 | 7,510.0 | 7,958.0 | 8,050.8 | 8,627.1 | 9,316.9 | 10,626.0 | + 8.0 | + 14.1 |
| 6. வெளிநாட்டிலுள்ள தேறிய முதலீட்டம் ... ... | — 208.0 | — 220.5 | — 93.8 | — 139.7 | — 167.6 | — 160.4 | + 58.9 | — 290.0 | — 288.6 | — 345.8 | | |
| 7. சர்வதேச நன்கொடைகள், மாற்றல்களின் தேறிய வரு வாய்களைக் குறைத்து ... | + 11.6 | — 21.6 | — 10.9 | — 7.1 | — 13.2 | — 40.1 | — 40.7 | — 36.6 | — 21.8 | — 23.0 | | |
| 8. மொத்தத் தேசிய செலவு ... | 6,433.1 | 6,666.5 | 6,834.7 | 6,922.6 | 7,329.2 | 7,757.5 | 8,069.0 | 8,300.5 | 9,006.5 | 10,257.2 | + 8.5 | + 13.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

சதவீதமும், தளபாடமும் வீட்டு இயக்கங்களும் 9.4 சதவீதமும், சொந்தக் கவனிப்பு, சுகாதாரம், போக்குவரத்தும் தகவல்களும் 12.8 சதவீதமும், பொழுதுபோக்கும் களியாட்டமும், 3.7 சதவீதமும் ஆகும். இச் செலவு அமைப்பு, குறிப்பாக உணவு, குடிவகைகள், புகையிலைக்கான உயர்ந்த சம வீதம், அபிவிருத்தி அடையும் பொருளாதாரத்தின் சிறப்புத் தகைமை களாகும்.

1968ல் அட்டவணை II (அ) 10ல் காட்டப்பட்டுள்ளபடியான இறக்கு மதிச் செலவு 1.3 சதவீதத்தாலும், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் 15.0 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன. மொத்தச் செலவிலேற்பட்ட 12.5 சதவீதத்தினுலான கூரிய அதிகரிப்பு, உண்மைச் செலவின் அதிகரிப்பை ஓரளவிற்கும், நுகர்வுப் பொருட்கள் விலைகளின் அதிகரிப்பை ஓரளவிற்கும் பிரதிபலிக்கிறது. கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுல் அளவிடப் பட்டபடியான நுகர்வோர் விலைகள், ஏற்றுமதித் தொகுதியில் 14.9 சத வீதத்தாலும், உள்நாட்டுத் தொகுதியில் 5.2 சதவீதத்தாலும், இறக்குமதித் தொகுதியில் 5.5 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

இறக்குமதிப் பொருட்களின்மீதான உண்மைச் செலவு 1968ல் 1.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுள்ளது. எனவே, இந்த அதிகரிப்பிற்கு, 1967 நவெம்பரின் ரூபாவின் நாணய மதிப்பிறக்கம் ஓரளவு காரணமாகவும், 1968 மேயில் அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டமை ஓரளவுக்குக் காரண மாகவும் ஏற்பட்ட விலையுயர்ச்சியே முழுக் காரணமாகும்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின்மீதான உண்மைச் செலவு 5.6 சதவீதத்தால் அதிகரித்து, முன்பு கூறப்பட்ட உணவு, தயாரிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. 1968ல் தனி யாளுக்கான செலவு நடைமுறை விலைகளின்படி, 1967ன் 6.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 11.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தனி யாளுக்கான உண்மைச் செலவு 1968ல் 3.3 சதவீதத்தால் அதிகரித்தது.

### மொத்த மூலதன ஆக்கம்

உள்நாட்டு மூலதன ஆக்க விவரங்கள் அட்டவணை II (அ) 11ல் தரப்பட் டுள்ளன. 1968ல் முதலீட்டம் சம்பந்தமான தரவுகள் கிடைத்துள்ள மூன்று துறைகளில் முயற்சி உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்துள்ளது. அவையாவன அரசாங்கமும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், தனியார் துறையுமாகும். முழு மொத்த நிலையான மூலதன வாக்கம் 14.7 சதவீதத்தால் அதிகரித்தது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் மட்டுமே 48.3 சதவீதத் தால் உயர்ந்தது. அரசாங்க, தனியார் துறைகளில் அதிகரிப்புகள் முறையே 5.5 சதவீதமும், 11.8 சதவீதமும் ஆகும்.

### அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் நிலையான மூலதன முதலீட்டம் 1967 இன் ரூபா 1,873 இலட்சத்திலிருந்து 1968ல் ரூபா 2,777 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது 48.3 சதவீத அதிகரிப்பாகும். இவ் வதிகரிப்பில் பெரும் பங்கு கட்டட ஆக்கத்தையொட்டியதாகும். அவை, ரூபா 982 இலட்சத் திலிருந்து 1968ல் ரூபா 1,634 இலட்சத்திற்கு உயர்ந்தன. இயந்திரம் சாதனங்களின் பேரிலுள்ள முதலீட்டம் ரூபா 345 இலட்சத்திலிருந்து, ரூபா 696 இலட்சத்திற்கு இரு மடங்கிற்கு மேலாக அதிகரித்துள்ளது.

### அரசாங்கமும் அரசாங்க முயற்சிகளும்

அரசாங்க, அரசாங்க முயற்சிகளில் நிலையான மூலதன ஆக்கம் 5.5 சதவீதத்தால் உயர்வுற்றது. இத்துறையின் முதலீட்டத் தொழிற்பாடு பிர தானமாக நீர்ப்பாசனம், காணி அபிவிருத்தி, போக்குவரத்து ஆகியவற்றில் ஏற்பட்டது.

### தனியார் துறை

தனியார் துறையில் நிலையான மூலதன வாக்கம் 11.8 சதவீதத்தால் அதிகரித்தது. இது பெரும்பாலும், 27.7 சதவீதத்தால் மூலதன ஆக்கம் அதிகரித்த கட்டட ஆக்கத்தையொட்டியதாகும்.

## அட்டவணை II (அ) 8

### நடைமுறை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின்மீது ஏற்பட்ட செலவு

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சினைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி ... | 6,286.8 | 6,313.3 | 6,502.5 | 6,796.7 | 7,290.5 | 7,483.5 | 7,699.0 | 8,223.8 | 9,808.7 |
| 2. மானியங்கள் நீக்கப்பட்டபின் மறைமுக வரிகள் ... ... | 407.5 | 384.3 | 490.7 | 485.2 | 484.5 | 529.3 | 629.4 | 828.6 | 787.4 |
| 3. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி ... | 6,694.3 | 6,697.6 | 6,993.2 | 7,281.9 | 7,775.0 | 8,012.8 | 8,328.4 | 9,052.4 | 10,596.1 |

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. நுகர்ச்சிச் செலவு: தனியார் ... ... ... ... | 5,019.9 | 4,911.7 | 5,009.6 | 5,339.1 | 5,754.8 | 5,880.9 | 6,273.7 | 6,711.6 | 7,550.4 |
| 5. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் ... ... ... ... | 911.0 | 926.2 | 979.4 | 1,010.6 | 1,090.1 | 1,156.7 | 1,158.3 | 1,228.3 | 1,407.8 |
| 6. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனியார் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்... | 675.0 | 706.9 | 677.0 | 771.6 | 777.2 | 609.7 | 841.8 | 931.2 | 1,136.9 |
| 7. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கமும், அரசாங்க முயற்சிகளும் ... ... | 302.7 | 394.6 | 403.4 | 388.7 | 335.9 | 403.5 | 353.3 | 445.8 | 530.9 |
| 8. மொத்த உள்நாட்டுச் செலவு ... ... ... ... | 6,908.6 | 6,939.4 | 7,069.4 | 7,510.0 | 7,958.0 | 8,050.8 | 8,627.1 | 9,316.9 | 10,626.0 |
| 9. பொருட்களினதும் சினக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் ... ... ... ... ... | 2,010.6 | 1,907.2 | 1,971.0 | 1,902.6 | 1,937.1 | 2,094.5 | 1,864.9 | 1,848.7 | 2,165.3 |
| 10. பொருட்களினதும் சினக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகளின் நீக்கம் ... ... ... ... | -2,208.5 | – 1,972.0 | – 2,070.3 | – 2,030.9 | – 2,101.9 | – 2,060.9 | – 2,154.7 | – 2,105.6 | – 2,473.6 |
| 11. சந்தை விலைகளின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீதான செலவு ... ... ... ... ... | 6,710.7 | 6,874.6 | 6,970.1 | 7,381.7 | 7,793.2 | 8,084.4 | 8,337.3 | 9,060.0 | 10,317.7 |
| 12. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர சினை வருமானம் ... | – 44.2 | – 39.9 | – 46.5 | – 52.5 | – 35.7 | – 15.4 | – 36.8 | – 53.5 | – 60.5 |
| 13. எஞ்சியவை, கையிருப்புகளில் ஏற்பட்ட முறைமுக மாற்றங்களும், புள்ளிவிபரத் தவறுகளும் ... ... | + 27.8 | – 137.1 | + 69.6 | + 47.3 | + 17.5 | – 56.2 | + 27.9 | + 45.9 | + 338.9 |
| 14. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின்மீது ஏற்பட்ட செலவு ... ... ... ... ... | 6,694.3 | 6,697.6 | 6,993.2 | 7,281.9 | 7,775.0 | 8,012.8 | 8,328.4 | 9,052.4 | 10,596.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 9

### நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்ச்சிச் செலவின் அமைப்பு 1 - I

| | 1967 | | 1968 | |
|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதம் | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதம் |
| 1. உணவு ... ... ... ... | 3,415.7 | 50.9 | 3,760.1 | 49.8 |
| 2. குடிவகைகள் ... ... ... | 214.5 | 3.2 | 206.7 | 2.7 |
| 2. புகையிலை ... ... ... ... | 422.5 | 6.3 | 424.9 | 5.6 |
| 4. ஆடைகளும், ஏனைய சொந்தப் பொருட்களும் | 449.2 | 6.7 | 553.9 | 7.3 |
| 5. வாடகையும், தண்ணீர்க் கட்டணங்களும் ... | 358.0 | 5.3 | 368.7 | 4.9 |
| 6. எரிபொருளும் வெளிச்சமும் ... ... | 130.4 | 1.9 | 171.5 | 2.3 |
| 7. தளபாடம், தட்டுமுட்டுப் பொருட்களும் வீட்டுச் சாதனங்களும் ... ... | 105.0 | 1.6 | 142.0 | 1.9 |
| 8. வீட்டு இயக்கங்கள் ... ... ... | 448.2 | 6.7 | 566.5 | 7.5 |
| 9. சொந்தக் கவனிப்பும், சுகாதாரச் செலவுகளும் | 306.5 | 4.6 | 387.8 | 5.1 |
| 10. போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும் ... | 569.2 | 8.5 | 578.9 | 7.7 |
| 11. பொழுதுபோக்கும் களியாட்டமும் ... | 233.5 | 3.5 | 282.9 | 3.7 |
| 12. நானாவித சேவைகள் ... ... ... | 92.3 | 1.4 | 107.1 | 1.4 |
| 13. வெளிநாட்டில் வதிவோர்களின் செலவு ... | 112.8 | 1.7 | 126.1 | 1.7 |
| 14. நீக்கம்: நாட்டிலுள்ள வதிவற்றோர்களின் எண்ணிக்கை ... ... ... | —146.2 | — 2.2 | — 126.7 | —1.7 |
| 15. வீட்டு, தனியார் இலாபமற்ற நிலையங்களின் நுகர்ச்சிச் செலவு ... ... ... | 6,711.6 | 100.0 | 7,550.4 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. இப் பகுப்பு, தேசியக் கணக்குகள் முறையையும், துணைசெய்யும் அட்டவணைகளையும் அடிப்படையாகக் கொண்டதாகும் — ஐ. நா., நியூயோர்க், 1964.

## அட்டவணை II (அ) 10

## நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவின் அமைப்பு - II

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முந்திய ஆண்டினைவிட சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1966 | 1967 | 1968 |
| (அ) பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் .. | 1,989.7 | 2,058.9 | 1,845.3 | 1,868.0 | 1,675.6 | 1,861.4 | 1,719.2 | 1,876.5 | 1,518.0 | 1,537.1 | + 9.1 | —19.1 | + 1.3 |
| 1. அரிசியும், கோதுமை மாவும், சீனியும் .. | 484.5 | 482.2 | 513.2 | 534.0 | 516.9 | 516.7 | 598.0 | 600.8 | 586.1 | 607.6 | + 0.5 | — 2.5 | + 3.7 |
| 2. ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்கள் .. | 1,327.7 | 1,424.9 | 1,195.5 | 1,206.2 | 1,029.7 | 1,235.9 | 1,011.1 | 1,161.8 | 819.1 | 803.4 | +14.9 | —29.5 | +19.2 |
| 3. சினைக்கொள் அல்லாத சேவைகள் .. | 177.5 | 151.8 | 136.6 | 127.8 | 129.0 | 108.8 | 110.1 | 113.9 | 112.8 | 126.1 | + 3.5 | — 1.0 | +11.8 |
| (ஆ) உள்நாட்டின் உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் .. .. .. | 2,950.7 | 3,170.8 | 3,330.7 | 3,443.8 | 3,884.1 | 4,073.8 | 4,369.5 | 4,648.7 | 5,429.8 | 6,243.1 | + 6.4 | +16.8 | +15.0 |
| 1. உள்நாட்டின் உற்பத்திப் பொருட்கள் .. | 2,080.3 | 2,243.6 | 2,365.5 | 2,442.0 | 2,842.6 | 2,928.2 | 3,049.0 | 3,275.9 | 3,996.9 | 4,673.0 | + 7.4 | +22.0 | +16.9 |
| அரிசி .. .. | 312.2 | 307.5 | 274.9 | 305.6 | 319.1 | 318.3 | 235.9 | 278.6 | 629.2 | 791.2 | +18.1 | +125.8 | +25.7 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள் .. | 231.9 | 187.0 | 162.0 | 154.3 | 209.5 | 217.3 | 272.7 | 277.6 | 291.8 | 323.7 | + 1.8 | + 5.1 | +19.9 |
| தேயிலை .. .. | 62.7 | 67.4 | 68.9 | 70.1 | 78.2 | 78.6 | 77.1 | 78.2 | 75.7 | 81.0 | + 1.4 | — 3.2 | + 7.0 |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. .. | 410.8 | 473.8 | 541.6 | 500.3 | 556.1 | 563.4 | 549.6 | 563.9 | 643.7 | 749.0 | + 2.6 | +14.2 | +16.4 |
| புகையிலை .. .. | 19.5 | 21.7 | 26.9 | 30.6 | 31.5 | 32.3 | 33.0 | 33.8 | 35.2 | 38.2 | + 2.4 | + 4.1 | + 8.5 |
| வெற்றிலையும் பாக்கும் .. .. | 81.0 | 86.9 | 88.3 | 80.9 | 84.6 | 78.5 | 70.8 | 68.1 | 71.2 | 71.8 | — 3.8 | — 4.6 | + 0.8 |
| விறகு .. .. .. | 70.6 | 73.0 | 76.0 | 77.9 | 79.7 | 81.8 | 82.7 | 84.0 | 86.3 | 95.7 | + 1.6 | — 2.7 | +10.9 |
| கால்நடை .. .. .. | 124.2 | 122.7 | 137.2 | 133.2 | 172.4 | 182.8 | 189.8 | 198.0 | 270.1 | 279.0 | + 4.3 | +36.4 | + 3.3 |
| மீன் .. .. .. | 78.3 | 102.6 | 144.9 | 176.8 | 181.4 | 191.0 | 191.8 | 210.3 | 280.0 | 364.3 | + 9.6 | +33.1 | +30.1 |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் .. | 689.1 | 801.0 | 844.8 | 912.3 | 1,130.1 | 1,184.2 | 1,345.6 | 1,483.4 | 1,613.7 | 1,879.1 | +10.3 | + 8.8 | +16.4 |
| 2. குடியிருப்புகளின் வாடகைகள் .. | 186.3 | 197.3 | 216.4 | 225.7 | 247.3 | 263.7 | 339.9 | 348.9 | 358.0 | 368.7 | + 2.6 | + 2.6 | + 3.0 |
| 3. போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும் .. | 240.0 | 255.1 | 271.5 | 287.5 | 293.2 | 337.1 | 373.2 | 400.3 | 391.8 | 425.6 | + 7.3 | — 2.1 | + 8.6 |
| 4. சேவைகள் மு.சே.ப. .. .. | 444.1 | 474.8 | 477.3 | 488.6 | 501.0 | 544.8 | 607.4 | 623.6 | 683.1 | 775.8 | + 2.7 | + 9.5 | +13.6 |
| தனியாட்களுக்கான நிதிச் சேவைகள் .. | 12.9 | 14.0 | 15.0 | 16.2 | 17.9 | 19.3 | 26.9 | 25.2 | 30.7 | 39.3 | — 6.3 | +21.8 | +28.0 |
| பொழுதுபோக்கும், களியாட்டமும் .. | 24.4 | 25.2 | 26.0 | 26.7 | 27.5 | 28.6 | 39.5 | 40.7 | 43.9 | 53.8 | + 3.0 | + 7.9 | +22.6 |
| வீட்டுச் சேவைகள் .. .. | 200.1 | 203.1 | 209.4 | 217.8 | 226.6 | 237.3 | 254.9 | 268.0 | 292.9 | 307.0 | + 5.1 | + 9.3 | + 4.8 |
| விடுதிகளும் போசனச்சாலைகளும் .. | 119.2 | 121.0 | 124.7 | 129.7 | 134.5 | 141.2 | 145.1 | 148.3 | 160.1 | 192.7 | + 2.2 | + 8.0 | +20.5 |
| பயில்தொழிற் சேவைகள், நிலையச்சேவைகள் மு. சே. ப. .. .. .. | 37.6 | 60.9 | 50.0 | 43.9 | 37.8 | 59.6 | 60.3 | 56.1 | 61.6 | 67.8 | — 7.0 | + 9.8 | +10.1 |
| சொந்தச் சேவைகள் மு. சே. ப. .. | 49.9 | 50.6 | 52.2 | 54.3 | 56.5 | 58.8 | 80.7 | 85.3 | 93.9 | 115.2 | + 5.7 | +10.1 | +22.7 |
| அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகளின் நீக்கம் .. .. .. | −109.8 | − 41.2 | −102.0 | −132.7 | − 50.0 | − 50.0 | − 55.3 | − 85.0 | − 90.0 | −103.1 | | | |
| இலங்கையில் வாசம் செய்யாதோராற் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் நீக்கம் .. .. | −194.9 | −168.6 | −162.3 | −169.5 | −170.6 | −130.4 | −152.5 | −166.5 | −146.2 | −126.7 | | | |
| மொத்தத் தனியார் நுகர்ச்சி | 4,635.7 | 5,010.3 | 4,911.7 | 5,009.6 | 5,339.1 | 5,754.8 | 5,880.9 | 6,273.7 | 6,711.6 | 7,550.4 | + 6.7 | + 7.0 | +12.5 |

விளக்கக் குறிப்பிற்கு 55ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை II (அ) 11

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | முந்திய ஆண்டினைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1967 | 1968 |
| அ. தனியார் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் ... | 798.6 | 675.0 | 706.9 | 677.0 | 771.6 | 777.2 | 609.7 | 841.8 | 931.2 | 1,136.9 | + 10.6 | + 22.1 |
| (I) மொத்த உள்நாட்டு நிலையான மூலதான ஆக்கம் ... | 782.3 | 705.0 | 696.3 | 737.2 | 711.3 | 779.0 | 663.3 | 798.4 | 924.3 | 1,101.3 | + 15.8 | + 19.1 |
| பயிர்நடுகையும், புனர்நடுகையும், காணி அபிவிருத்தியும் ... | 62.1 | 63.2 | 63.2 | 64.0 | 69.5 | 87.2 | 69.1 | 73.1 | 78.5 | 79.4 | + 7.4 | + 1.1 |
| கட்டட வேலையும், ஏனைய சில ஆக்கத் தொழிலும் ... | 384.2 | 396.1 | 377.8 | 405.0 | 362.2 | 409.1 | 387.8 | 428.9 | 519.6 | 701.7 | + 21.1 | + 35. |
| இயந்திரமும் பொறிகளும் ... | 116.8 | 74.8 | 112.5 | 114.3 | 155.7 | 174.5 | 112.1 | 137.4 | 154.1 | 165.4 | + 12.2 | + 7.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் ... | 152.5 | 108.7 | 84.8 | 91.9 | 62.8 | 50.1 | 62.7 | 98.0 | 79 .7 | 62.9 | — 18,7 | — 21.1 |
| மூலதனப் பொருட்கள் (மு.பே.ச.) ... | 66.7 | 62.2 | 58.0 | 62.0 | 61.1 | 58.1 | 31.6 | 61.0 | 92.4 | 91.9 | + 51.5 | — 0.5 |
| தனியார் துறை; மொத்தம் ... | 691.9 | 616.6 | 619.0 | 648.5 | 617.3 | 627.9 | 513.7 | 577.9 | 737.0 | 823.6 | + 27.5 | + 11.8 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள்–மொத்தம் | 90.4 | 88.4 | 77.3 | 88.7 | 94.0 | 151.1 | 149.6 | 220.5 | 187.3 | 277.7 | — 15.1 | + 48.3 |
| (ii) கையிருப்புக்களிலேற்பட்ட மாற்றம் | + 16.3 | — 30.0 | + 10.6 | — 60.2 | + 60.3 | — 1.8 | — 53.6 | + 43.4 | + 6.9 | + 35.6 | | |
| தேயிலை ... | + 1.0 | — 12.5 | — 3.1 | — 37.1 | — 16.9 | — 23.5 | — 64.1 | + 21.6 | — 24.4 | — 10.7 | | |
| இரப்பர் ... | — 2.5 | — 26.8 | + 18.6 | + 2.9 | + 20.3 | — 12.2 | — 10.7 | — 14.7 | + 10.3 | — 4.9 | | |
| தேங்காயெண்ணெய் ... | ... | ... | ... | ... | ... | — 4.2 | + 10.3 | + 2.0 | ... | ... | | |
| கால் நடை ... | + 17.8 | + 9.3 | — 4.9 | — 26.0 | + 56.9 | + 38.1 | + 10.9 | — 35.3 | — 24.2 | + 6.6 | | |
| நாணுவித (கூட்டுத்தாபனங்களுடனுள்ள கையிருப்புக்கள்) ... | — | — | — | — | — | — | — | + 69.8 | + 45.2 | + 44.6 | | |
| ஆ. அரசாங்கமும் அரசாங்க முயற்சிகளும் | 313.9 | 302.7 | 394.6 | 403.4 | 388.7 | 335.9 | 403.5 | 353.3 | 445.8 | 530.9 | + 26.2 | + 19.1 |
| (i) மொத்த உள்ளூர் நிலையான மூலதன ஆக்கம் ... | 335.8 | 317.1 | 341.1 | 363.6 | 384.0 | 340.6 | 379.7 | 388.8 | 442.0 | 466.4 | + 13.7 | + 5.5 |
| (ii) கையிருப்புகளிலேற்பட்ட மாற்றம் | — 21.9 | — 14.4 | + 53.5 | + 39.8 | + 4.7 | — 4.7 | + 23.8 | — 35.5 | + 3.8 | + 64.5 | | |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மாவும், சீனியும் ... | + 13.0 | — 26.3 | — 12.1 | — 2.0 | + 0.1 | — 4.7 | + 22.0 | — 37.6 | — 6.8 | + 68.5 | | |
| உ. தி. வி. நெல் ... | — 34.8 | + 9.7 | + 65.3 | + 45.1 | + 9.6 | | | — | + 10.6 | — 4.0 | | |
| சாராயம் ... | — 0.1 | + 2.2 | + 0.3 | — 3.3 | — 5.0 | ... | + 1.8 | + 2.1 | — | — | | |
| இ. சகல துறைகள் – மொத்த உள்ளூர் நிலையான மூலதன ஆக்கம் ... | 1,112.5 | 977.7 | 1,101.5 | 1,080.4 | 1,160.3 | 1,113.1 | 1,013.2 | 1,195.1 | 1,377.0 | 1,667.8 | + 15.2 | + 21.1 |
| (i) மொத்த உள்ளூர் நிலையான மூலதன ஆக்கம் ... | 1,118.1 | 1,022.1 | 1,037.4 | 1,100.8 | 1,095.3 | 1,119.6 | 1,043.0 | 1,187.2 | 1,366.3 | 1,567.7 | + 15.1 | + 14.7 |
| (ii) கையிருப்புகளிலேற்பட்ட மாற்றம்... | — 5.6 | — 44.4 | + 64.1 | — 20.4 | + 65.0 | — 6.5 | — 29.8 | + 7.9 | + 10.7 | +100.1 | | |

கட்டட ஆக்கத்தின் மூலதன ஆக்க அதிகரிப்பு, இறக்குமதி செய்யப்பட்ட கட்டட ஆக்கப் பொருட்களின் உயர்ந்த கிடைப்பனவைப் பிரதிபலித்தது. கட்டட ஆக்கப் பொருட்களின் இறக்குமதித் தொகைக் குறிகாட்டி (1958=100) 1967ல் 64.7 ஆக இருந்து, 1968ல் 74.1 ஆக அதிகரித்துள்ளது. 1968ம் ஆண்டின் மூன்றும், நான்காம் காலாண்டுப் பகுதிகளிலேற்பட்ட இவ்வதிகரிப்பானது, அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதினலேற்பட்டதாகும். அத்துடன், வியாபாரிகளின் கையிருப்புகள் குறைக்கப்பட்டமை காரணமாக இரண்டாம் காலாண்டுப் பகுதியில் கட்டடக்காரர்களுக்குக் கிடைக்கக்கூடிய கட்டடப் பொருட்களின் நிரம்பல்கள் அதிகரித்தற்கும் சான்றுகள் உள.

### மொத்தப் பொருள்வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

அட்டவணை *II* (அ) 12ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடியதான இறக்குமதிகளையும், உள்ளூர் உற்பத்தியையும் உள்ளடக்கிய மொத்தப் பொருள்வளங்கள் நடைமுறை விலைகளில் ரூபா 16,256 இலட்சத்தால் அல்லது 14.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. உள்ளூர் உற்பத்தி விரிவு காரணமாக உண்மை நியதிகளில் பொருள்வளங்கள் 8.3 சதவீதத்தால் அதிகரித்தன. இறக்குமதிகள் 1.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

பொருள்வளங்களின் பயன்பாட்டின் பகுப்பாய்வு, ஏற்றுமதி 17.1 சதவீதத்தாலும், நுகர்வு 12.8 சதவீதத்தாலும், முதலீட்டம் 21.1 சதவீதத்தாலும் அதிகரித்ததைக் காட்டுகிறது. உண்மை நியதிகளின் அளவிடப்பட்டபடி, இவ்வமைப்பு முழுமையும் வேறுபட்டதாகும். நுகர்ச்சிக்கு உபயோகிக்கப்பட்ட உண்மைப் பொருள்வளங்கள் 5.6 சதவீதத்தாலும், முதலீட்டங்கள் 5.0 சதவீதத்தாலும் அதிகரித்தன.

### மொத்தத் தேசியச் செலவின் முக்கிய இறக்குமதியின் பங்கு

அண்மை ஆண்டுகளில் இலங்கைப் பொருளாதாரத்தில் நுகர்ச்சி அமைப்பில் அவதானிக்கப்பட்ட முக்கிய மாற்றம், இறக்குமதிப் பங்கின் வீழ்ச்சியேயாகும். இது, முன்பு இறக்குமதி செய்யப்பட்ட சில பொருட்களின் உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1968ம் ஆண்டில், அட்டவணை *II* (அ) 14லிற் காணப்பட்டபடி, இறக்குமதி விலைகளின் கூரிய அதிகரிப்புக் காரணமாக நுகர்ச்சிச் செலவில் நேரடி இறக்குமதிகளின் பங்கு, கொ.கா.க. விலைகளில், 1967ன் 15.2 சதவீதத்திலிருந்து 1968ல் 16.5 சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. கொ.கா.க. விலைகளில் அளவிடப்பட்ட, மூலதன ஆக்கத்தின் இறக்குமதிப் பங்கு, 1967 இன் 23.1 சதவீதத்திலிருந்து 1968ல் 23.8 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

---

### விளக்கக் குறிப்புகள்

பொது :

1. பிரசுரிக்கப்பட்ட மூலங்கள் (இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்கள் போன்றவை), சில குறித்த விடயங்களில் விசேட மூலங்கள் (உதாரணமாக, கைத்தொழில் உற்பத்திபற்றிக் கைத்தொழிற்றிணைக்களம்), ஆகியவற்றைத் தவிர இந்த அட்டவணைகளைத் தயாரிக்கத் தேவையான சகல மூலாதாரமான விபரங்களும் குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினற் கொடுக்கப்பட்டவை.
2. இவ்வட்டவணைகளிலுள்ள எண்தொகைகளின் கடைசி எண்கள் மட்டமாக்கப்பட்டதன் காரணமாக விடயங்களின் எண்தொகைகளைக் கூட்டும்பொழுது, அவை மொத்தங்களுடன் சரியாக ஒத்துவரமாட்டா.
3. அட்டவணைகளிலே தரப்பட்டுள்ள சதவீத மாற்றங்கள் யாவும், முதலாவது தசமதானமுடைய பத்து இலட்சம் ரூபாய்களைப் பெறுமானங்களின் அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டுள்ளன.
4. மு. சே. ப. — முன்பு சேர்க்கப்படாதவை.
5. 1966 முதல் 1968 வரையான ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

## அட்டவணை II (அ) 12

### நடைமுறைச் சந்தைவிலைகளின்படி பொருள்வளங்களும் அவற்றின் பயன்பாடும்

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | முந்திய ஆண்டினைவிட சதவீத மாற்றம் 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ. பொருள்வளங்கள் | | | | | | | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6,469.8 | 6,710.7 | 6,874.6 | 6,970.1 | 7,261.1 | 7,793.2 | 8.084.4 | 8,337.3 | 9,060.0 | 10,317.6 | + 3.1 | + 8.7 | +13.9 |
| பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | 2,175.7 | 2,208.5 | 1,972.0 | 2,070.3 | 2,030.9 | 2,101.9 | 2,060.9 | 2,154.7 | 2,105.6 | 2,473.6 | + 4.6 | — 2.3 | +17.5 |
| **மொத்தம் ... ...** | **8,645.5** | **8,919.2** | **8,846.6** | **9,040.4** | **9,292.0** | **9,895.1** | **10,145.3** | **10,492.0** | **11,165.6** | **12,791.2** | + 3.4 | + 6.4 | +14.6 |
| ஆ. பாவிப்பு | | | | | | | | | | | | | |
| நுகர்ச்சி ... ... | 5,517.0 | 5,930.9 | 5,837.9 | 5,989.0 | 6,349.7 | 6,844.9 | 7,037.6 | 7,432.0 | 7,939.9 | 8,958.2 | + 5.6 | + 6.8 | +12.8 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 1,112.5 | 977.7 | 1,101.5 | 1,080.4 | 1,039.7 | 1,113.1 | 1,013.2 | 1,195.1 | 1,377.0 | 1,667.8 | +18.0 | +15.2 | +21.1 |
| பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் | 2,016.0 | 2,010.6 | 1,907.2 | 1,971.0 | 1,902.6 | 1,937.1 | 2,094.5 | 1,864.9 | 1,848.7 | 2,165.3 | —11.0 | — 0.8 | +17.1 |
| **மொத்தம் ... ... ... ...** | **8,645.5** | **8,919.2** | **8,846.6** | **9,040.4** | **9,292** | **9,895.1** | **10,145.3** | **10,492.0** | **11,165.6** | **12,791.2** | + 3.4 | + 6.4 | +14.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (அ) 13

நடைமுறைச் சந்தை விலைகளின்படி, மொத்த உள்நாட்டுச் செலவும், கிடைத்தற்குரிய பொருள்வளங்களும்

| | 1960 | | 1961 | | 1962 | | 1963 | | 1964 | | 1965 | | 1966 | | 1967 | | 1968 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | (6) ம் வரிசையின் சதவீதம் |
| 1. நுகர்ச்சிச் செலவு — தனியார் ... | 5,019.9 | 75.3 | 4,911.7 | 71.9 | 5,009.6 | 72.4 | 5,339.1 | 72.8 | 5,754.8 | 74.2 | 5,880.9 | 72.9 | 6,273.7 | 75.6 | 6,711.6 | 74.5 | 7,550.4 | 73.6 |
| 2. நுகர்ச்சிச் செலவு—அரசாங்கம் ... | 911.0 | 13.7 | 926.2 | 13.6 | 979.4 | 14.1 | 1,010.6 | 13.8 | 1,090.1 | 14.1 | 1,156.7 | 14.3 | 1,158.3 | 14.0 | 1,228.3 | 13.6 | 1,407.8 | 13.7 |
| 3. மொத்த உள்ளூர் மூலதன ஆக்கம்: தனியார் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் ... | 675.0 | 10.1 | 706.9 | 10.3 | 677.0 | 9.8 | 771.6 | 10.5 | 777.2 | 10.0 | 609.7 | 7.6 | 841.8 | 10.1 | 931.2 | 10.3 | 1,136.9 | 11.1 |
| 4. மொத்த உள்ளூர் மூலதன ஆக்கம் : அரசாங்கமும், அரசாங்க முயற்சிகளும் ... | 302.7 | 4.5 | 394.6 | 5.8 | 403.4 | 5.8 | 388.7 | 5.3 | 335.9 | 4.3 | 403.5 | 5.0 | 353.3 | 4.3 | 445.8 | 4.9 | 530.9 | 5.2 |
| 5. மொத்த உள்ளூர்ச் செலவு ... | 6,908.6 | 103.6 | 6,939.4 | 101.5 | 7,069.4 | 102.1 | 7,510.0 | 102.5 | 7,958.0 | 102.6 | 8,050.8 | 99.8 | 8,627.1 | 103.9 | 9,316.9 | 103.4 | 10,626.0 | 103.6 |
| 6. மொத்தத் தேசிய உற்பத்தி (சீர்திருத்தப்பட்டது) ... | 6,666.5 | 100.0 | 6,834.7 | 100.0 | 6,923.6 | 100.10 | 7,329.2 | 100.0 | 7,757.5 | 100.0 | 8,069.0 | 100.0 | 8,300.5 | 100.0 | 9,006.5 | 100.0 | 10,257.2 | 100.0 |
| 7. (6)ல் இருந்து 5க்கு மேலதிகமாகக் கொண்டுள்ளதைப் பின்வரும் விடயங்கள் நிரப்புகின்றன :- | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) வெளிநாட்டிலுள்ள நிகரமுதவீடுகளின் கரைவு ... | +220.5 | | + 93.8 | | +139.7 | | +167.6 | | +160.4 | | — 58.9 | | +290.0 | | +288.6 | | +345.8 | |
| (ஆ) சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகரவருமானம்.. | + 21.6 | | + 10.9 | | + 7.1 | | + 13.2 | | + 40.1 | | + 40.7 | | + 36.6 | | + 21.8 | | + 23.0 | |
| (அ) + (ஆ) ... | +242.1 | | +104.7 | | +145.8 | | +180.8 | | +200.5 | | — 18.2 | | +326.6 | | +310.4 | | +368.8 | |

விளக்கக் குறிப்புகளுக்குப் பக்கம் 55ஐப் பார்க்கவும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 14

## மொத்த உள்நாட்டுச் செலவில் நேரடி இறக்குமதிகளின் பங்கு

| | 1963 | | | 1964 | | | 1965 | | | 1966 | | | 1967 | | | 1968 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் |
| 1. செலவு–சந்தை விலைகளின் படி (பத்து இலட்சம் ரூபாய்களில்) ... | 5,339.1 | 1,010.6 | 1,095.3 | 5,754.8 | 1,090.1 | 1,119.6 | 5,880.9 | 1,156.7 | 1,043.0 | 6,273.7 | 1,158.3 | 1,187.2 | 6,711.6 | 1,228.3 | 1,366.3 | 7,550.4 | 1,407.8 | 1,567.7 |
| 2. இறக்குமதிகளின் பங்கு கொ. கா. க. விலைகளில் :- | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) ... | 983.8 | 51.8 | 292.5 | 1,431.3 | 47.2 | 294.5 | 945.3 | 59.3 | 218.7 | 1,305.8 | 80.8 | 304.4 | 1,021.4 | 78.9 | 315.0 | 1,242.7 | 53.6 | 72.4 |
| (ஆ) சதவீதம் ... | 18.4 | 5.1 | 26.7 | 24.9 | 4.3 | 26.3 | 16.1 | 5.1 | 21.0 | 20.8 | 7.0 | 25.6 | 15.2 | 6.4 | 23.1 | 16.5 | 3.8 | 23.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (அ) 1

விடயம் (அ) (6) ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம், ஏற்றுமதி விலைகளின்படி.

விடயம் (அ) (7) இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம், கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையில்.

விடயம் (அ) (8) (9) (11) தனியாளுக்கான சராசரிகளை அளவிடுவதற்குக் கீழ்காணும் சனத்தொகை மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| நடுப்பகுதியின் சனத்தொகை | 9,625,000 | 9,896,000 | 10,168,000 | 10,443,000 | 10,712,000 |
| ஆண்டு | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
| நடுப்பகுதியின் சனத்தொகை | 10,971,000 | 11,232,000 | 11,491,000 | 11,741,000 | 11,964,000 |

அட்டவணை II (அ) 3

விடயம் I (அ) (i) பொருட்கள் சேவைகளினது சில்லறை விலைப்படி.

விடயம் I (ஆ) (i) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இவ்விடயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தேயிலை, தெங்கு ஆகியனவற்றின் மதிப்பீடுகள், சராசரி ஆளுக்கான நுகர்ச்சிபற்றிய தரவுகளின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டுள்ளன. 1959ம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டுவரையிலான மதிப்பீடுகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தரவுகள் 1963ம் ஆண்டின் நுகர்வோர் நிதி அளவையிலிருந்து பெறப்பட்டிருக்கும்போது, 1963ம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்ட தரவுகள் 1963ம் ஆண்டின் நுகர்வோர் நிதி அளவையிலிருந்து பெறப்பட்டன. ஆகவே, 1963ம் ஆண்டு தொடக்கமான மதிப்பீடுகள், உண்மையாகப் பார்க்கில், அவற்றிற்கு முற்பட்ட ஆண்டுகளின் மதிப்பீடுகளுடன் நுணுக்கமாக ஒப்பிடற்குரியனவல்ல.

விடயம் IV (i)ம் (ii)ம்
பின்வருவனவற்றின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி, உத்தரவாத விலைத்திட்ட நெல், சாராயம்.

விடயம் IV (iii) தேயிலை, இறப்பர், தேங்காயெண்ணெய், கால்நடை ஆகியனவற்றின் கையிருப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்.

விடயம் V நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், கைருயிப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் ஆகியனவற்றால் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

விடயம் VI நிகரவெளிநாட்டு முதலீடுகள், நடைமுறைக் கணக்கில், தேசத்தின் மிகையாகும்.

அட்டவணை II (அ) 4

விடயம் 2 உள்ளூராட்சி வரிகளையும் சேர்த்து.

விடயம் 8 நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம், ஆகியவற்றால் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

விடயம் 14 இவ்வட்டவணையிலுள்ள 11ம், 12ம் விடயங்களின் அட்சர கணிதத் தொகை, அட்டவணை II (அ) 3ன் விடயம் viiiல் காட்டப்பட்டுள்ளபடி மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சமமாகின்றது. இவ்வட்டவணையின் விடயம் 14 (சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின்மீது ஏற்பட்ட செலவு) என்பதும் 11ம் 12ம் விடயங்களின் அட்சர கணிதக் கூட்டுத்தொகையிலிருந்து விடயம் 13ல் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும், புள்ளி விபரத் தவறுகளும்) எனக் காட்டப்பட்டுள்ள தொகையால் மட்டுமே வேறுபடுகின்றது.

அட்டவணை II (அ) 5

விடயம் ஆ (i) தேயிலை, தேங்காய் ஆகியவற்றின் மதிப்புகளுக்கு அட்டவணை II (அ) 3ல் உள்ள 6ம் குறிப்பைப் பார்க்கவும்.

விடயம் ஆ (iv) ஆட்களுக்கான நிதிச்சேவைகள், வங்கிகள், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் ஏனைய நிதி நிலையங்கள் ஆகியவற்றால், முயற்சித் தலங்களிலும் பிறிதான குடியிருப்பாளர்களுக்கு அளித்த சேவைகளின் பெறுமானம்.

விடயம் ஆ (iv) "பயில்தொழிற்" சேவைகளும் நிலையச் சேவைகளும் மு. சே. ப. தனியார் மருத்துவ, சட்ட, கல்விச் சேவைகளாலும், இலாபத்தை நோக்கமற்றதாகக்கொண்ட தாபனங்களாலும் (உதாரணமாக மதம், பொதுநலத் தாபனங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவைகள்) அளிக்கப்பட்ட சேவைகள்.

விடயம் ஆ (iv) சொந்தச் சேவைகள் மு. சே. ப. வண்ணார், அம்பட்டர், சாத்திரீகர், சாச் சடங்கு மேற்கொள்பவர்கள் ஆகியவர்களின் சேவைகள்.

அட்டவணை II (அ) 8

விடயம் 6 இவ்வட்டவணையின் ஏனைய விடயங்கள் யாவும் மொத்தத் தேசியச் செலவுபற்றிய அட்டவணை II (அ) 3ல் இருந்து எடுக்கப்பட்டமையின், இவ்வெண்தொகையும் அவற்றுடன் ஒரே சீராக விளங்கும்படியாக, அட்டவணை II (அ) 5இன் விடயம் 3ல் காட்டப்பட்டுள்ள மொத்தத் தேசிய உற்பத்தியின் எண் தொகைகளை, அவ்வட்டவணையின் 13ம் விடயத்தால் திருத்தியமைத்து இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II (அ) 12

தெங்கும், தெங்குப் பொருட்களும்-இவ்விடயம் கொப்பரா, தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய், தேங்காய்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

**திருத்தங்கள்**

1968ம் ஆண்டறிக்கையில் தோன்றும் தேசிய உற்பத்தியும் செலவும் என்ற பகுதியினது மதிப்பீடுகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

(1) ஆண்டு நடுப்பகுதியின் சனத்தொகை மதிப்பீடுகள் 1963 தொடக்கம் 1967 வரைக்கும் பதிவாளர் தலைமை அதிபதியினால் திருத்தப்பட்டுள்ளன. இதன் விளைவால், ஆண்டு நடுப்பகுதியின் சனத்தொகையால் தனியாளுக்கான நுகர்ச்சி எண்தொகைகளைப் பெருக்குவதன் மூலம் பெறப்படும் சில பொருட்களின் உற்பத்தியினதும் நுகர்ச்சியினதும் மதிப்பீடுகள் திருத்தப்பட்டுள்ளன. தெங்கும் தெங்கு உற்பத்திகளும், பழங்களும் மரக்கறி வகைகளும், தேயிலையும் (உள்ளூர் நுகர்ச்சி), வெற்றிலையும் பாக்கும், விறகும் தின் புகையிலையும் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

(3) அட்டவணை II (அ) 2 சில சேவைகளைப் பொறுத்தமட்டில் நேரடியாகத் தரவுகள் கிடைக்கப் பெறாததால், 1968ற்கு முன்பு அவைகளின் மதிப்பீடுகள் பின்வருமாறு கணக்கிடப்பட்டன.

  (i) 1953ம் ஆண்டின் புள்ளிவிவர மதிப்பீட்டின் அடிப்படையிலமைந்த வருமான எண்தொகைகளை குடிசன அதிகரிப்பால் பெருக்குவதன் மூலம்.

  (ii) 1953 தொடக்கம் கூலி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களைச் சீராக்கம் செய்வதன் மூலம்.

1968 ஆண்டறிக்கையில் 1965ம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கும் மதிப்பீடுகள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

வருமானத்தைக் குடிசன மதிப்பு அதிகரிப்பால் பெருக்காது வருமானம் 1953ற்கும் 1963ற்குமிடையிலான புள்ளிவிவர அறிக்கைகளிலிருந்து பெற்ற இவ்வாண்டுகளுக்கான தொழில்புரிவோரினது கூட்டுவளர்ச்சி வீதத்தால் பெருக்கப்பட்டது.

(4) அட்டவணை II (அ) 5 முந்திய ஆண்டுகளில் 'ஏனைய உணவுப் பயிர்களின்' மதிப்பீடுகள் தனியாளுக்கான நுகர்ச்சி எண்தொகைகளை சனத்தொகையினால் பெருக்குவதன் மூலம் பெறப்பட்டன. அவை 1968ல் புள்ளிவிவர குடிசன மதிப்புத் திணைக்களத்திலிருந்து பெற்ற உண்மையான உற்பத்தித் தரவுகளைப் பாவிப்பதன் மூலம் கணிக்கப்பட்டன. 1968ற்கு முந்திய எண்தொகைகளும் இவ்வடிப்படையில் திருத்தப்பட்டுள்ளன.